# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 19 ஞாயிற்றுக்கிழமை (01-04-2001)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:126


சமாதான முயற்சிகள் 'அவுட்'!

## மத்தியஸ்தப் பணியில் இருந்து நோர்வே திடீரென விலகியது!

லண்டன், ஏப்.1

பிந்திய செய்தி

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடுநிலையாளராகச் செயற்பட்டு வந்த நோர்வே, தனது மத்தியஸ்தப் பணியில் இருந்து திடீரென விலகிவிட்டதாக நேற்று நள்ளிரவு லண்டனுக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இந்த முடிவு குறித்து லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்துக்கு நோர்வே நேற்று முன்னிரவில் உத்தியோகபூர்வமாக அறிவித்ததாகவும் அறியவந்தது.

இருதரப்புக்கும் இடையில் சமரசம் காணும் தனது முயற்சியில் ஏற்பட்ட கசப்புணர்வு காரணமாகவோ அல்லது நோர்வேயின் சமரச முயற்சிக்கு எதிராக இந்தியா காட்டி வந்த அதிருப்தி நிலை காரணமாகவோ நோர்வே இந்த முடிவை எடுத்திருக்கலாம் என்ற கருத்து செய்தி வட்டாரங்களில் பரவலாக அடிபட்டது.

(மேலதிக தகவல் கடைசிப் பக்கத்தின் இடதுபுற மேல் மூலையில்) (உ)

மே 10இல் தமிழகத் தேர்தல்:

## தி.மு.க. கூட்டணியிலிருந்து ம.தி.மு.க. வெளியேறியது!

### தனித்துப் போட்டியிட முடிவு

சென்னை,ஏப்.1

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி.மு.க. கூட்டணியிலிருந்து வை.கோபாலசாமி தலைமையிலான ம.தி.மு.க. வெளியேறியது. எதிர்வரும் மே 10ஆம் திகதி நடைபெறவிருக்கும் தமிழக சட்டமன்றத் தேர்தலில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் தனித்துப் போட்டியிடும் என்று வை.கோ. நேற்றிரவு அறிவித்தார்.





தி.மு.க. தலைமையிலான தேர்தல் கூட்டணியில் தொகுதிப் பங்கீடு தொடர்பான பிரச்சினை முற்றியதை அடுத்தே ம.தி.மு.க. வெளியேறும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

தற்போது தமிழகத்தில் ஆட்சியிலிருக்கும் தி.மு.க. கூட்டணியிலிருந்து ஏற்கனவே பாட்டாளி மக்கள் கட்சி, தமிழக ராஜீவ் காங்கிரஸ், தேசிய ஜனதா தள் போன்றவை வெளியேறிய

(14ஆம் பக்கம் பார்க்க)

# சுயநிர்ணய உரிமையை வழங்கி நாடு பிளவுபடுவதைத் தடுங்கள்!

### பாதீனியத்தை அழிக்கத் தவறின் தண்டனை

கொழும்பு,ஏப்.1

உங்களது வீட்டுப் பயிர்களிடையே அல்லது தோட்டங்களில் பாதீனியக் களை காணப்பட்டால் அதை அழிக்கத் தவறுவது - தண்டனைக்குரிய குற்றமாகும்.

இதற்கு ஒன்று முதல் ஆறு மாதங்கள் வரையான சிறைவாசம் அல்லது ஒரு லட்சம் ரூபா வரை

(14ஆம் பக்கம் பார்க்க)

### ஆயர் தெரிவில் முடிவில்லை

கொழும்பு,ஏப்.1

அங்கிலிக்கன் திருச்சபையின் இலங்கைக்கான புதிய ஆயரைத் தெரிவு செய்யும் பொறுப்பு பிரிட்டனில் உள்ள கன்ரபரியின் அதிமேற்றிராணியாரிடம் (Arch Bishop of Canterbury) ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இலங்கை ஆயராகப் பணிபுரிந்த வண. கெனத் பெர்னாண்டோவின் சேவைக் காலம்

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரசைக் கோருகின்றது தமிழர் ஆசிரியர் சங்கம்

திருகோணமலை,ஏப்ரல்1

**நோர்வேயின் மத்தியஸ்த முயற்சியையும், ஒரு தலைப்பட்சமாக யுத்தநிறுத்தத்தை அறிவித்து அதைத் தொடர்ந்து நீடித்துவரும் புலிகளின் நடவடிக்கையையும் வரவேற்றுள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் -**

**உடனடியாக யுத்தத்தை நிறுத்தி, புலிகளுடன் பேச்சுக்களை நடத்தி, வடக்கு - கிழக்கு மாகாணம் தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டை ஏற்று, பிரிந்து போகின்ற சுயநிர்ணய உரிமையுடைய சமஷ்டி அலகைத் தமிழர்களுக்கு வழங்குவதன் மூலம் நாடு பிளவுபடுவதைத் தடுக்கும்படி இலங்கை அரசைக் கேட்டிருக்கின்றது.**

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் 27ஆவது வருடாந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றிலேயே இவ்வாறு கோரப்பட்டுள்ளது.

இந்த மாநாடு திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் நேற்று முடிவடைந்தது.

மாநாட்டின் இரண்டாவதும் இறுதி நாளுமான நேற்று நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் மற்றும் சில வருமாறு:-

(14ஆம் பக்கம் பார்க்க)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின்

## பொதுச் செயலராக திரும்பவும் மகாசிவம்

திருகோணமலை,ஏப்.1

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக த.மகாசிவம் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சங்கத்தின் தலைவராக திருகோணமலை இந்துக் கல்லூரியின் அதிபர் சி.தண்டாயுதபாணி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

சங்கத்தின் புதிய உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்

(14ஆம் பக்கம் பார்க்க)




யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வாவின் உருவச்சிலை, நினைவுத் தூபி ஆகியன அமைந்துள்ள பிரதேசத்தை யாழ்.மாநகரசபை 'தந்தை செல்வா சதுக்கம்' என்று பிரகடனப்படுத்தியுள்ளது. இது தொடர்பான பெயர்க் கல்லை நேற்று யாழ்.மாநகர சபை முதல்வர் என்.ரவிராஜ் திரைநீக்கம் செய்து வைப்பதைப் படத்தில் காணலாம். யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ. ஆனந்தசங்கரி, ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) பிரமுகர் த.சுபத்திரன் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர். *(படம்: கொனிகா கலர் லாப்)*

பதவி நீக்கப்பட்ட குடும்ப நல உத்தியோகத்தர்கள்

## மாநகர சபையைக் கலைக்கக் கோரி டக்ளஸ் தேவானந்தாவுக்கு மகஜர்

### நாளை முதல் உண்ணாவிரதப் போராட்டத்திலும் குதிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.1

"ஒழுங்காக இயங்கி வந்த யாழ்.மாநகரசபை சுகாதாரப் பிரிவு நிர்வாகத்தைச் சீர்குலைத்து, குடும்ப நல உதவியாளர்களை நிர்க்கதி நிலைக்குத் தள்ளிய யாழ்.மாநகர சபையைக் கலைக்க வேண்டும்."

- இவ்வாறு வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அனுப்பி வைத்த மகஜரில் யாழ்.மாநகர சபையால் பதவி நீக்கம் செய்யப்பட்ட 36 குடும்ப நல உதவியாளர்களும் கோரியுள்ளனர்.

★ ஊழியர்களுக்கு அநியாயம் விளைவிக்கும் பதில் ஆணையாளரை உடனடியாக மாற்ற வேண்டும்.

★ சுகாதாரப் பகுதி நிர்வாகத்தை குலைத்து எமக்கு இந்த நிலையை ஏற்படுத்திய மாநகர சபையைக் கலைக்க வேண்டும்.

★ புதிய வைத்திய அதிகாரிகளை நியமிப்பதை உடன் நிறுத்த வேண்டும்.

★ புதிய குடும்ப நல உதவியாளர்களைத் தெரிவு செய்வதையும் உடன் நிறுத்தவேண்டும்.

- ஆகிய நான்கு கோரிக்கைகளை முன்வைத்து இந்த மகஜர் அனுப்பப்பட்டுள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## வல்லுறவுச் சம்பவத்தை கண்டித்து மன்னாரில் ஆர்ப்பாட்ட முஸ்தீபு

### பொலீஸ் தடுத்தால் மீறவும் முடிவு

மன்னார்,ஏப்.1

மன்னாரில் கைது செய்யப்பட்ட இரு தமிழ்ப் பெண்களை படையினர் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவத்தைக் கண்டித்தும் -

இந்த அநாகரிகச் செயலில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசு மீது அழுத்தம் கொடுப்பதற்காகவும் -

எதிர்வரும் 9ஆம் திகதி மன்னாரில்

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

05-04-2001 வியாழன் ஆரம்பமாகின்றது

# திருமறைக் கலாமன்றம்

வழங்கும்

மனிதம் எமது பாடல்

தவக்கால ஆற்றுகை

## காவிய நாயகன்

மனிதம் எமது தேடல்

- திருப்பாடுகளின் காட்சி -

காலம் :- ஏப்ரல் 05, 06, 07, 08 - 2001
(வியாழன், வெள்ளி. சனி, ஞாயிறு)

நேரம் :- மாலை 6.15 மணி

இடம் :- மன்ற அரங்கு

குறிப்பு:- ★ முதல் நாள் 05 ஆம் திகதி மட்டும் பிரவேசம் இலவசம் ஏனைய நாள்களுக்கு அனுமதி 10.00, ஆசனம் 20.00
★ இன்று (01-04-2001) ஞாயிறு முதல் நுழைவுச்சீட்டுக்களை மன்ற அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மனிதத்துவத்தின் தேடலுக்கான கல்வாரிப் பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 2393

- திருமறைக் கலாமன்றம்.

(C/16002)



# கணிதப் பயிற்சி நூல் விற்பனைக்கு

2001இல் க.பொ.த.சாதாரண தரம் பரீட்சை
எழுதும் மாணவர்களுக்கான
புதிய பாடத்திட்டத்தின்படி அமைந்த

## கணிதப்பயிற்சி நூல்

(விடைகளுடன் கூடியது)

திரு.நா.கேதீஸ்வரன்

2001ஆம் ஆண்டுக்கான கணிதம் I,II இன் மாதிரி அமைப்பின் தகவல்களையும் உள்ளடக்கியது.

கிடைக்கும் இடங்கள்:-
★ ஸ்ரீ லங்கா புத்தகசாலை - யாழ்ப்பாணம்.
★ பிரியங்கா புத்தகசாலை - பருத்தித்துறை.

(86120)



# 45 ஆம் நாள் நினைவலைகள்



## குற்றாலம் முரளீதரன்

தோற்றம் 26-07-1979

மறைவு 16-02-2001

ஐயிரண்டு மாதங்கள் சுமந்து பெற்றவள் பரிதவிக்க
தோளிலும் மார்பிலும் தூக்கி வளர்த்த தந்தை அவன்
வெந்து நோக
உடன் பிறந்த சகோதரர்கள் ஓலம் இட்டு அழுதிட
உற்றார் உறவினர் புலம்பித் தவித்திட
உன் உற்ற நண்பர்கள் உன் வழியினைப் பார்த்துக்
கலங்கித் தவித்து நிற்க
எங்கு தான் சென்றாயோ?
எப்போது உனை இவ்வுலகில் காண்போமோ நண்பா?

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
உன் அன்பு உள்ளங்கள்.

(86139)


## மாணவருக்கு இலவச பாடசாலை உபகரணங்கள்

வடமராட்சி, ஏப்.1

பருத்தித்துறை இன்பர்சிட்டி ஞானியார் கல்விக் கழகம் வடமராட்சிப் பிரதேசத்தில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டுக்குக் கீழ்வாழும் 102 மாணவர்களுக்கு இலவசமாக பாடசாலை உபகரணங்களை முதற் கட்டமாக வழங்கியுள்ளது.

இரண்டாவது கட்டமாக இரண்டாம் தவணையின் போதும், மூன்றாம் கட்டமாக மூன்றாம் தவணையின் போதும் இலவச பாடசாலை உபகரணங்கள் தொடர்ந்து வழங்கப்படும் என ஞானியார் கல்விக் கழகம் அறிவித்துள்ளது. (க-173)

## வெள்ளைப்பூரான் கடித்து இதுவரை 15 பேர் சிகிச்சை

வெள்ளைப் பூரானால் கடியுண்ட மேலும் இருவர் புதன்கிழமை இரவு மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அல்வாய் வட்டுவத்தையைச் சேர்ந்த பொன்னுத்துரை சுகந்தன் (வயது 20) புலோலி மந்திகையைச் சேர்ந்த இளையவன் பிள்ளையான் (வயது48) ஆகியோரே வெள்ளைப் பூரானால் கடியுண்டவர்கள் ஆவர்.

கடந்த பத்துத் தினங்களில் இதுவரை 15பேர் வெள்ளைப் பூரானால் கடியுண்டு மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(க-117)

## புதிய இடத்தில் இந்து மயானம்

அம்பனில் புதிய இடம் ஒன்றில் இந்து மயானம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அம்பன் பகுதி மக்கள் இறந்தவர்களை தகனம் செய்வதற்கு அம்பன் வைத்தியசாலைக்கு அண்மையில் உள்ள மயானத்தையே பாவித்து வந்தார்கள்.

தற்போது அப்பகுதி பொது மக்களின் நடமாட்டத்திற்கு தடை விதிக்கப்பட்ட பகுதியாகவுள்ளது அதன் காரணமாகவே புதிய இடம் ஒன்றில் மயானம் அமைக்கப்பட்டுள்ளது.

(க-182)


SHAMROCK
A/L 2003
★ கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன
★ Gr. 4 முதல் O/L வரை
★ Spoken English
(C/16000)

லஷ்சுமி இணுவில்
கடைசி வாரமாக
விஜயகாந்த் (3 வேடங்களில்),
மந்த்ரா, செந்தில் நடிப்பில்
சிம்மாசனம்
(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)
(86144)

ராஜா யாழ்ப்பாணம்
விஜயகாந்த்,
மீனா, பிரபுதேவா
நடிப்பில் (C/16006)
வானத்தைப்போல
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)

நாகம்ஸ் சுன்னாகம்
அஜீத்,
கார்த்திக், மீனா
நடித்த
ஆனந்தப் பூங்காற்றே
(ரீல்ஸ்) தினசரி 11.00, 2.30 (பு.நே.)
(86134)


# உதைபந்தாட்ட சம்மேளன விருது



இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நேற்று (31-03-2001) சனிக்கிழமை நடத்தப்பட்ட விருது வழங்கும் வைபவத்தில் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் உபதலைவரும் (முன்னையகால தலைவர்/செயலாளர்/பொருளாளர்) முன்னாள் தேசிய உதைபந்தாட்ட வீரரும், சர்வதேச உதைபந்தாட்ட மத்தியஸ்தரும், தேசிய உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளரும், யாழ். மாவட்ட பாடசாலைகளின் உதைபந்தாட்ட அபிவிருத்திக்கான இணைப்பாளருமாகிய

## திரு. எஸ். கிளிபேட் அன்ரனிப்பிள்ளை

அவர்களுக்கு மேற்படி கௌரவ விருது கிடைத்ததையிட்டு எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் மனமகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறோம். அத்தோடு இதே விருதைப் பெற்ற பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் பிரதிநிதி திரு. தம்பிப்பிள்ளை இரட்ணசிங்கம் அவர்களுக்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ். உதைபந்தாட்ட லீக் சமூகம்.

(C/15999)


# எரிக் கணேஷ் ஸ்தாபனம்

உங்கள் முக இலட்சணத்துக்கேற்ப
மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்,
விழுந்த பற்களுக்கு புதிய பற்கள் பொருத்தவும்
மிதந்த பற்களுக்கு கிளிப் போடவும்
தன்னிகரில்லாத தனிப்பெரும் ஸ்தாபனம்

Eric Ganesh
DENTAL & OPTICIANS

564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

91, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில்.

★ பாடசாலை மாணவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

(86136)



# சங்கீதம் பயிலும் மாணவர்களுக்கு

ஸ்ரீ தர்ஷனனின் N.C.O.M.S I st GRADE VOCAL
ஒலிநாடா வெளிவந்துள்ளது.

கிடைக்குமிடங்கள்:
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
வஸந்திஜா எலக்ரிக்கல்ஸ், சுன்னாகம்.
விதுஜா சுப்பர் மார்க்கெட், இணுவில்.

(86138)



# சுனில் ஆட்ஸ்

25.03.2001 வரை எம்மிடம் ஒப்படைத்த படச் சுருள்களின் படங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
03.04.2001 அன்று கொழும்புக்கு படச் சுருள்கள் அனுப்பி வைக்கப்படும்.

## விற்பனைக்கு

Pentium III ற்கான Scanners
Creative, Yamaha CD Writers
T.V. Cards
Sony CD Roms
Dust Covers, Computer Cleaner tin Sprayers (England)
Head phone with mic
Blank C.D.S. WR.C.D

NOTE:
1. (எம்மிடம் M.P.3 தமிழ், ஆங்கிலம், ஹிந்தி புதிய பாடல் C.Dக்கள் விற்பனைக்கு உண்டு)
2. (புதிய பழைய பாடல்கள் C.D இல் இருந்து C.Dக்குப் பதிவு செய்து தரப்படும். ஓடியோ கசட்டில் இருந்தும் C.D பதிவு செய்து தரப்படும்)

சுனில் ஆட்ஸ்
277, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(C/16008)

# வன்னிக்கான பொருளாதாரத் தடை பாதுகாப்பு அமைச்சினால் தளர்வு

## குறிப்பிட்ட சில பொருள்களுக்குத் தடை நீக்கம்

கொழும்பு, ஏப். 1

பாதுகாப்புப் படையினரின் சட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு பொது மக்கள் கொண்டு செல்ல பாதுகாப்பு அமைச்சினால் தடை விதிக்கப்பட்டுள்ள சில பொருள்களுக்கு தடை நீக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பொருளாதாரத் தடை தளர்த்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வா நேற்று முன்தினம் வெளியிட்ட புதிய பட்டியல் உடனடியாக அமுலாக்கப்படும் வகையில் நடைமுறைப்படுத்துமாறு பாதுகாப்புப் படை அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினர் யாழ். குடாநாட்டை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பின் பாதுகாப்பு அமைச்சினால் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கான பொருள்கள் தடை தொடர்பாக விசேட வர்த்தமானி ஒன்று வெளியிடப்பட்டது.

புதிய தடை தளர்வின் பிரகாரம் தேங்காய் எண்ணெய், சவர்க்காரம், பிரிஸ்ரல் போர்ட், பிறவுன் பேப்பர், பைக்கற்றில் அடைக்கப்பட்ட பழரசங்கள், சூப் வகைகள், குடிவகைகள், சகல ரக சிகரெட்டுக்கள், நூடில்ஸ், முட்டை, பனடோல் உட்பட பல பொருள்களுக்குத் தடை நீக்கப்பட்டுள்ளது.

மேற்படி பொருள்களைக் கூட்டுறவுக்கடைகள் கொண்டு செல்ல முன்னரும் அனுமதி வழங்கப்பட்டது.

ஆனால் பொது மக்கள் கொண்டு செல்ல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. ஆனால் இக்கட்டுப்பாடுகள் நேற்று முன்தினம் முதல் தளர்த்தப்பட்டுள்ளது. இந்த பொருள்களை பொது மக்களும் தாராளமாக கொண்டு செல்லலாம் என வவுனியா பாதுகாப்புப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசும் புலிகள் இயக்கமும் நடத்தவுள்ள சமரச பேச்சு வார்த்தைக்கு முன் தடைப் பொருள்கள் பட்டியலை நீக்க வேண்டும் என புலிகள் இயக்கம் வலியுறுத்தி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (சு)

---

உதயன்

## விவசாயப் பொருளாதாரம்

விவசாயப் - பெருமக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு நாம் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டியது அவசியமாகும்.

எமது பல்கலைக்கழக (விவசாய பீடத்தின் ஆய்வுகளும் அதன் முடிவுகளும் இப்பிரதேச விவசாயிகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை மையமாகக் கொண்டே அமையவேண்டும். அவ்வாறில்லை என்றால் அதில் எவ்வித அர்த்தமும் இருக்காது.

எமது பிரதேசத்தில் அறிவும் அனுபவமும் மிக்க நிபுணர்கள் பலர் இருக்கின்றனர். அவர்களோடு பல்வேறு திணைக்களங்களின் அதிகாரிகளும் இணைந்து விவசாயிகளின் இன்றைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயலவேண்டும்.

யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தில் இடம்பெற்ற விவசாயம் சம்பந்தமான செயலமர்வில் உரையாற்றுகையில், விவசாயத்துறைப் பீடாதிபதி க. இராசதுரை இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் இரண்டு மிகப்பிரதான தொழில்களில் விவசாயமும் ஒன்று என்பது தெரிந்த ஒன்றே. இப்பிரதேச மக்களின் பொருளாதார உயர்ச்சியிலும் வீழ்ச்சியிலும் விவசாயிகளின் தொழில் முன்னேற்றமும் அவர்களின் முயற்சியும் பெரும் பங்கு வகிக்கின்றன.

குடாநாட்டின் பொருளாதாரம் கொழும்பிலிருந்து வரும் ''மணி ஓடர்'' பொருளாதாரம் என்ற நிலையிலிருந்து மாறி ஐரோப்பிய நாடுகளில் இருந்து கிடைக்கும் செலாவணிப் பொருளாதாரமாக மாற்றம் அடைந்துள்ளது. எனினும் அதுவும் நிரந்தரமானது என்று சொல்வதற்கு இல்லை. குடாநாட்டை ஒரு கைத்தொழில் பிரதேசமாக மாற்றி பொருளாதார வளர்ச்சிக்கும் பலத்துக்கும் அதனையே நம்பியிருக்கக்கூடிய சாத்தியம் இல்லை. புதிய தொழில்நுட்பங்கள் மூலம் இம்மாவட்டத்தின் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்தும் சாத்தியமும் உடனடியாக இல்லை.

அரசனை நம்பிப் புருஷனைக் கைவிடும் நிலைக்குக் குடாநாட்டுப் பொருளாதாரம் இல்லை. எமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் விவசாயம் — கடற்றொழில் இரட்டை வளமே எமக்கு எப்போதும் கைகொடுக்கக்கூடியது.

இந்த இரண்டு வளங்களுமே எமது பொருளாதார மூலாதாரங்கள் என்பதனை, தற்காலிக நிலைகண்டு — மேம்பாடுகளில் மதிமயங்கி—ஒருபோதும் மறந்துவிடலாகாது.

ஆகையால் விவசாயத்துறைப் பீடாதிபதியின் கருத்து ஆழமாக உணரப்பட வேண்டியதாகும். விவசாயத்துறையின் முன்னேற்றத்துக்கு, விவசாயிகளின் தொழில்வளத்தைப் பெருக்குவதற்கு எல்லா மட்டங்களினதும் நிறுவனங்களினதும் துறைசார் பிரிவுகளினதும் — அவற்றில் பணிபுரியும் எல்லோரினதும்—கூட்டுமுயற்சியும் மனமார்ந்த உழைப்பும் அவசியம்.

யாழ்ப்பாணம் வானம் பார்த்த பூமி, மாரி மழைவளமும் மெல்லக் குன்றிவருகிறது. இத்தகைய பின்னணியில், பிரதேசத்தில் உள்ள எல்லா வளங்களையும் -- புதிய வளங்களையும் இனங்கண்டு எமது பிரதேச சூழ்நிலைக்கு ஏற்ப புதிய வழிமுறைகளையும் செய்முறைகளையும் கண்டறிந்து செயற்படுத்தி விவசாயத்துறையைத் தூக்கி நிமிர்த்த வேண்டும். யாழ். பல்கலைக்கழகத்தின் பணி இது விடயத்தில் மிகப் பெரிதாக அமைவது அவசியம்.

---

## 5 பாடசாலைகளின் அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஏப். 1

யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த 5 பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள அதிபர் பதவிக்கான வெற்றிடங்களுக்கு — இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த தற்பொழுது பாடசாலைகளில் அதிபர்களாகக் கடமையாற்றாதவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தகுதியுடையவர்கள் தமது சுயவிவரங்களுடன் எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். வலயக் கல்வி அலுவலகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

அச்செழு மெ.மி.த.க. பாடசாலை, புத்தூர் மெ.மி.த.க. பாடசாலை, கோண்டாவில் றோ.க.த.க. பாடசாலை, கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம், கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலம் ஆகிய பாடசாலைகளுக்கே அதிபர் பதவி வெற்றிடங்கள் உள்ளன. (க-10)

## கிருமிநாசினி தெளித்தவர் மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 1

தோட்டத்தில் கிருமிநாசினி தெளித்துக்கொண்டிருந்த வேளை திடீரென மயக்கமுற்றவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்படும்போது இடைவழியில் மரணமானார்.

ஏழாலையில் நேற்று இடம் பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த கந்தையா நவரட்ணராஜா (வயது 46) என்பவரே உயிரிழந்தார்.

மயக்கமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் மேலதிகசிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டபோதே இடையில் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட இவரது சடலம் மரணவிசாரணையின் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (உ-15)

---

## விளையாட்டு நிகழ்வு

வடக்கு, கிழக்கு மாகாண கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சினால் யாழ் மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளிடையே நடத்தப்பட்டு வரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளின் இறுதி ஆட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (உ-86)

## தாதிய மாணவர் இரத்ததானம்

யாழ்ப்பாணம் தாதிய பயிற்சிப் பாடசாலையின் 41ஆவது ஸ்தாபக தினத்தை முன்னிட்டு கடந்த 28 ஆம் திகதி அங்கு பயிற்சி பெறும் தாதிய மாணவர்கள், யாழ். போதனா வைத்தியசாலை இரத்தவங்கிக்கு இரத்த தானம் வழங்கினர்.

1960 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் திகதி இந்தப் பயிற்சிப் பாடசாலை யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ம-15)

---

# சம உரிமை கிடைத்தால் புலிகள் தமிழீழக்கோரிக்கையைக் கைவிடுவர்

## நீதிக்கும் சமாதானத்துக்குமான குழுவிடம் மன்னார் ஆயர்

கொழும்பு ஏப் 1

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரே எண்ணம் தனித் தமிழீழம் மட்டுமே எனவும், வடக்கு கிழக்கு பகுதிகளில் அவர்கள் சிங்கள மக்களை வந்து வாழ அனுமதிக்கமாட்டார்கள் எனவும் பேரினவாதிகளும், பேரினவாதப் பத்திரிகைகளும் தென்னிலங்கையில் பிரசாரம் செய்து வருவது உண்மைக்குப் புறம்பான செய்தி ஆகும்.

தமிழ் மக்கள் சம உரிமை பெற்று நிம்மதியாக வாழ வழியேற்படுத்தப்பட்டால் புலிகள் தமிழீழக்கோரிக்கையை கைவிடத்தயாராகஉள்ளனர். அதேபோல் சிங்கள மக்களை வரவேண்டாம் என ஒரு நாளும் கூறவில்லை. சிங்கள மக்களை அவர்கள் அன்போடு வரவேற்க எந்நேரமும் தயாராக உள்ளனர் என்பதை தென்பகுதி சிங்கள மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு மன்னார் மறை மாவட்ட ஆயர் வந்தனைக்குரிய கலாநிதி இராயப்பு ஜோசப் அடிகளார் தெரிவித்தார்.

இலங்கையில் நீதிக்கும் சமாதானத்துக்குமான உலக ஒத்துழைப்பு மன்றக் குழுவினர் கடந்த திங்கட்கிழமை நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு மன்னாருக்குச் சென்றிருந்தனர்.

இக்குழுவினர் ஆயரை அவரது இல்லத்தில் சந்தித்த வேளையில் ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மையில் ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்த விடயங்கள் சமாதான முயற்சிகளுக்கு பாதகமானதாகவே அமைந்துள்ளன எனவும் ஆயர் ஒத்துழைப்பு மன்றக் குழுவினருடன் நடத்திய கலந்துரையாடலின்போது தெரிவித்தார்.

உலக ஒத்துழைப்பு மன்றக் குழுவினர் மன்னாரின் பேசாலை, தலைமன்னார் ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்து அங்குள்ள நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்கு அன்பளிப்புகளை வழங்கினர்.

அத்துடன் பாதுகாப்புப் படை முகாம்களுக்குச்சென்ற குழுவினர் படையினர் மத்தியில் இன்றைய முக்கியதேவை சமாதானமே என்பதையும் தெளிவுபடுத்தினர்.

மன்னார் சென்ற குழுவில் மன்றப் போஷகர் மஹநகடவல புண்யசாரதேரர், இணைகூட்டிணைப்பாளர்வணபிதா யோஹான் தேவானந்த, மன்றப் பொருளாளர் சுப்பிரமணியம் ரமேஷ் ஆகியோரும் சென்று இருந்தனர். (க

## அலங்கார உற்சவம்

மல்லாகம் கோணப்புலம் ஞானவைரவர் ஆலய ஆலங்கார உற்சவம் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நிறைவு பெறும். தினசரி பகல் உற்சவம் காலை 8.00 மணிக்கும் இரவு உற்சவம் மாலை 4.00 மணிக்கும் இடம்பெறும்.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 1

யாழ். மாவட்ட கூட்டுறவுத் திணைக்களத்தில் பணியாற்றும் உத்தியோகப் பற்றற்ற கணக்காய்வாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் எதிர்வரும் 4ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் தலைமையில் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

## இருவருக்குச் சிறை

அனுமதிப் பத்திரம் இன்றி சாராயம் விற்ற இருவருக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் இரு மாதச் சிறைத் தண்டனை விதித்தார்.

இம்மாதம் 23 ஆம் திகதி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இரண்டு வழக்குகளிலேயே மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டது.

கரவெட்டி மேற்கைச் சேர்ந்தவர்களான நித்தியானந்தன் - பிரதீபன், சின்னையா - ஐயாத்துரை ஆகிய இருவருக்குமே மேற்படி தண்டனை விதிக்கப்பட்டது.

இவர்கள் இருவரும் இதற்கு முன்னரும் ஒரு தடவை அனுமதிப் பத்திரம் இன்றி சாராயம் விற்றதற்காக குற்றப் பணம் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது (ம.-31-11ட)

## கூட்டம்

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் தலைவர் தா. இராசநாயகம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக சாவகச்சேரி நகரசபை செயலாளர் மு.செ. சரவணபவும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி நகர கிராம அலுவலர் வை. இராசரத்தினமும் கலந்து கொள்வர். (ம—117)

---


யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்

### தாள் பணிந்து ஏத்துகின்றோம்

எண்ணமெலாம் உன்னடியில் ஒன்றுகூட்டி
ஒண்பொருளே நின்னடியே பெரிதென்றெண்ணி
மண்ணினிலே நல்ல வண்ணம் வாழவேண்டி
விண்பொருளே தாள் பணிந்து ஏத்துகின்றோம்:
திண்ணமுடன் வருமடியார் நலனைப் பேணும்
தீவண்ணர் திறன்காட்டும் தேவரீரே
வண்ணையிலே நின்னருளைப் பெரிதும் கூட்டி —நம்
மண்ணினிலே உரிமையுடன் வாழச் செய்குவையே!

மிருசுவில் மு. க. சிவானந்தம்

(இன்று 14 ஆம் திருவிழா)


### நாளை

பங்குனி 20
திங்கட்கிழமை
திதி: நவமி
முன் இரவு: 10.33 வரை.
நட்சத்திரம்: புனர்பூசம்
பிற்பகல் 4.02 வரை.
சுபநேரம்: 12.11—01 41
இராகுகாலம்: 07 41—09 11
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

கடன் இல்லாதவனே பணக்காரன்; உடல் ஆரோக்கியம் உள்ளவனே செல்வந்தன்.

# மாதகல் சென்று வீடு பார்க்க அனுமதிகோரி 12பேர் விண்ணப்பம்

சண்டிலிப்பாய், ஏப். 1
தங்கள் சொந்த இடங்க ளில் மீளக் குடியமர்வதற்கு இதுவரை அனுமதிக்கப் படாத மாதகல் மேற்கைச் சேர்ந்த 12 பேர் தங்கள் வீடு வாசல்களை நேரில் சென்று பார்வையிட அனுமதி கோரி யுள்ளனர்.

வீடுகள் சேதமடைந்ததற் கான நஷ்டஈட்டைப் பெறுவ தற்கு விண்ணப்பிப்பதற்கு வசதியாக சேத விவரங்க ளைத் திரட்டுவதற்காக அப் பகுதிக்குச் சென்று வரத் தம்மை அனுமதிக்குமாறு கேட்டு இவர்கள் பொன்னா லையிலுள்ள கடற்படை முகாம் பொறுப்பதிகாரியி டம் மகஜர் ஒன்றைச் சமர்ப் பித்துள்ளனர்,

'உ' பங்கீட்டு அட்டை வைத்திருப்பவர்களான இவர் கள் கடந்த பத்து வருட கால மாக அப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களிலும் வசித்து வரு கின்றனர். தாங்கள் வீடுக ளைப் பார்வையிடச் செல் லும்போது சேத விவரங்களை மதிப்பீடு செய்வதற்கு வசதி யாக மாதகல் மேற்கு கிராம அலுவலர், தேசிய வீடமைப்பு அதிகார சபை யின் தொழி நுட்ப உத்தியோ கத்தர் ஆகியோரையும் அழைத்துச் செல்லவும் அனு மதி வழங்கி உதவுமாறு அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள் ளது. மகஜரின் பிரதி சண் டிலிப்பாய் பிரதேச செயல ருக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. (ஜ-135)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 23 – 04 – 1943

விண்ணில் 01 – 04 – 1999

### அமரர் பாக்கியநாதர் யோசப் தோமஸ்

(தொழில் நுட்ப உத்தியோகத்தர்)

பாசத்தின் திருவுருவே! எங்களை விட்டுப் பிரிந்து இரண்டாண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்களைவிட்டு ஒருபோதும் அகலாது.

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
பெற்றோர், சகோதரர்,
உறவினர்.

வட்டாரம் 12,
நெடுந்தீவு. (சி/15984)

## நீங்காத நினைவில் இரண்டாம் ஆண்டு



அன்னை மடியில் 14 – 04 – 1950

ஆண்டவன் அடியில் 21 – 03 – 1999

### அமரர் சிங்காரம் சந்திரலிங்கம்

திதி:- 01–04–2001

ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன அப்பா!
உங்கள் ஆருயிர்ப் பாசத்துக்கு ஈடாகுமா?
தேறுதல் சொல்ல தெய்வம் வந்தென்ன அப்பா?
உங்கள் திருமுகம் பார்ப்பது போலாகுமா?
ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எம் துயர் அப்பா?
இரண்டு ஆண்டென்ன ஈராயிரம் யுகங்கள்தான்
சென்றாலும் — எம்
ஆயுள் உள்ள வரை நீங்குமோ உங்கள் நினைவு அப்பா!
கனிவான உங்கள் முகமெங்கே? அப்பா!
கண்ணெனக் காத்த மனைவி, பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகளைக் காண மீண்டும் ஒரு பிறப்பு
எடுத்திடு அப்பா!
பிறப்பவர்கள் இறப்பது உலக நியதி அப்பா! ஆனால்
உங்களைப் பிரிந்து எங்களால் வாழ முடியவில்லையே?
தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்வதில்
நிறைவு கண்ட எந்தையே! அடிபணிந்த இறையடியை
இவரேற்ற போது படி கிடந்து கதறுகின்றோம்
இன்றைய நாளில்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கும்:

தகவல்: மனைவி:- சவுந்தலா,
மகள் S. சுஜா பிள்ளைகள்:- பவா, சுஜா,
கம்பர்மலை. செந்தில்,
மருமகன்:- சீலன்,
பேரப்பிள்ளைகள்:- கிருசாந், சாருகாந்
உற்றார், உறவினர், நண்பர்கள்.

மாத்திரா வளவு,
கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை, (85663)

## புத்தர் சிலை விஷமிகளால் உடைத்துச் சேதம்

கொழும்பு, ஏப். 1
வத்தேகம ரஜமகா விகா ரையில் புராதன புத்தர் சிலை ஒன்றின் தலை விஷமிகளால் உடைத்து சேதப்படுத்தப்பட் டுள்ளதாக விகாரையின் பிக்கு ஒருவர் வத்தேகம பொலீஸில் புகார் செய்துள்ளார்.

இவ்வாறு உடைக்கப்பட் டுள்ள புத்தர் சிலையின் தலை ஒன்றரை அடி உயரமுடையது புதையல் தேடுபவர்கள் இதனை உடைத்திருக்கலாம் என பொலீஸார் தெரிவிக்கின் றனர்.

(க)

## தென்மராட்சி மாணவர்களுக்கு

தென்மராட்சி, ஏப். 1
சாவகச்சேரி மகளிர் கல் லூரியில் ஐந்தாம் தர புல மைப் பரிசில் கொடுப்பனவு பெறும் மாணவர்கள் தற் போது தற்காலிகமாக கல்வி பயிலும் பாடசாலையில் கடந்த ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களுக் குரிய வரவுச் சான்றிதழுடன் எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் கரவெட்டி ரலன்ற் கல்வி நிலையத்தில் இயங் கும் கல்லூரிக்கு வருமாறு அதிபர் அறிவித்துள்ளார்.

(க-117)

* ★ ★

கச்சாய் அ. த. க பாட சாலையில் இருந்து தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன வற்றுக்கு விண்ணப்பிக்க வேண்டிய மாணவர்கள் புத் தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல் லூரியில் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு அதி பர் கேட்டுள்ளார்.

(க)

* ★ ★

அண்மையில் வெளியான ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையில், சித்திபெற்று வரணி மகா வித்தியாலயத் தில் க. பொ. த. உயர்தர வகுப்புகளில் சேர விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு முன்னர்—

நெல்லியடி எக்ஸலன்ற் கல்வி நிலையத்தில் இயங்கும் வித்தியாலயத்தில் பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழுட னும், பாடசாலை அனுமதி விண்ணப்பத்துடனும் வருகை தருமாறு வித்தியாலய அதி பர் வே. நவரத்தினராசா அறிவித்துள்ளார்.

(க-117)

## கோப்பாய்ப் பிரதேச செயலக வளவிலும் பாதீனியம் செடி!

வலி. வடக்கு, ஏப். 1
பயிர்களுக்கு ஊறுவிளை விக்கும் பாதீனியம் செடி கோப்பாய்ப் பிரதேச செயல கக் கட்டட வளவு முதல் பரவ லாக காணப்படுகின்றது.

இதே போன்று வலி. வடக் கிலும் கூட மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத் திற்கு அருகிலும் மற்றும் பல இடங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றது.

பாதீனியம் செடிகளை அழிப்பதற்கென கோப்பாய்ப் பிரதேச செயலாளர் பிரிவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ள போதி லும் பரவலாக மக்கள் நட மாடும் பகுதிகளிலேயே இவை காணப்படுவதையிட்டு அதி ருப்தி தெரிவிக்கப்படுகிறது.

இதேபோன்று, வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல் லூரியை அண்டிய பகுதியிலும் பெருமளவில் பாதீனியம் செடி கள் காணப்படுகின்றன.

பொது அமைப்புகள் இப் பகுதிகளில் பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கையில், சிரமதானப் பணியில் ஈடுபட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கதாகும்.

(க-86)

## புங்குடுதீவில் கண் பரிசோதனை முகாம் இன்று

யாழ்ப்பாணம், ஏப. 1
அமரர் சு. ஸ்ரீபாஸ்கரன் ஞாபகார்த்தமாக மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் இலவச கண் பரி சோதனை முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு புங்குடுதீவு சர் வோதய வளாகத்தில் நடை பெறவுள்ளது.

(க-10)

## உண்ணாவிரதப் போராட்டத்தை கைதிகள் கைவிடச் சம்மதம்

கொழும்பு, ஏப்ரல் 1
சாகும்வரையான உண்ணா விரதம் ஒன்றை வியாழனன்று ஆரம்பித்த போகம்பரைச் சிறைச்சாலையின் 14 கைதி கள் அதனைக் கைவிடச் சம் மதித்துள்ளனர்.

நீதி அமைச்சு அதிகாரிகள் தலையிட்டதைத் தொடர்ந்து இவர்கள் உண்ணாவிரதத் தைக் கைவிடத் தீர்மானித் துள்ளதாக நீதி அமைச்சின் அறிக்கையொன்று தெரிவிக் கின்றது.

தேர்தல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளின் பேரில் கைதாகியுள்ள இவர்களுக்கு பிணை வழங்கப்பட வேண் டும் என்பதே இவர்களின் கோரிக்கையாகும்.

பிணை வழங்குவது தொடர் பாகவும் சட்ட உதவி வழங்கு வது தொடர்பாகவும் உறுதி மொழி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து உண்ணாவிரதம் இப்போது கைவிடப்பட்டுள் ளது.

(க)

## மெய்வன்மைப் போட்டி

தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் மு. ஜெயகுமார் தலை மையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக, சங் கானைக் கல்விக்கோட்ட உத விக் கல்விப் பணிப்பாளர் சி. செல்லையா, திருமதி செல் லையா ஆகியோரும் சிறப்பு விருந்தினராக சங்கானை கிராமிய வங்கி முகாமையா ளர் திருமதி சு. ஆனந்தராசா வும் கலந்துகொள்வர்.

(க-28)


## அராலி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம்

மாபெரும்

## மரதன், சைக்கிள் ஓட்டப்போட்டி

அராலி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் 61ஆவது ஆண்டுநிறைவு விழாவை முன்னிட்டு மாபெரும் மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

காலம்:- 13 - 04 - 2001 வெள்ளிக்கிழமை
காலை 6-10 மணி

இடம்:- நிலைய முன்றில்

பங்கு பற்றும் போட்டியாளர்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

– நிர்வாகம்

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை. (சி-15998)



சங்கானை

## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

## வெற்றுச் சாக்குகளும், வெற்றுப் பைகளுக்குமான கூறுவிலைகோரல்

எமது சங்கத்தில் 68 கிலோ கொண்ட பெரிய வெற்றுச் சாக்குகளும், 50 கிலோ கொண்ட சிறிய சாக்குகளும், வெற்றுப்பைகளும் விற்பனைக்குண்டு. பெற்றுக்கொள்ள விரும்புவோர் வெற்றுப் பொருள் களை, சங்க வேலைநாள்களில் பார்வையிட்டு கூறு விலையினைச் சமர்ப்பிக்கவும்.

மீளளிப்பு வைப்பாக ரூபா 1000 செலுத்தப்பட வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 10-04-2001

பொது முகாமையாளர்,
சங்கானை ப. நோ. கூ. சங்கம்,
(சி/16003) சங்கானை.

# திருட்டுக்களைத் தடுக்க எவரும் துணிந்து முன்வராதது ஏன்?

உதயன் 11.03.2001 ஆம் திகதிய இதழின் தலையங்கம் 'உடனடியான விழிப்புணர்வு தேவை' என்று அமைந்திருந்தது.

மேற்படி விடயம் தொடர்பாக எனது குறிப்பு:-

அங்கே திருட்டு, இங்கே திருட்டு எனும் செய்தி அடிக்கடி உதயனில் காணப்படுகிறது. ஆயினும் அச் செய்தியையிட்டு யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

முழத்துக்கொரு இராணுவம், பொலீஸ், கிராமத்துக்கொரு கிராம அலுவலர், ஊருக்கொரு செயலர், மாவட்டத்துக்கொரு அரச அதிபர், பிரதேச குடியியல் நிர்வாகத்தைக் கவனிப்பது மக்களின் உயிரையும் உடைமைகளையும் பாதுகாப்பது இவர்களின தொழில். அத் தொழில் சரிவரச் செய்வதற்கென்றே கைநிறைய ஊதியம் வழங் கப்படுகிறது.

இங்ஙனமிருக்க நாட்டிலே களவு, கொள்ளை, இடம் பெயர்ந்தவரின் சொத்துக்கள் சூறை, காடைத்தனம் எல்லாம கட்டுப்பாடு ஏதுமின்றி நடக்கின்றன.

இவற்றால் பாதிக்கப்படும் அப்பாவிகளோ சுயநலவாதிகள். சமுதாய நலனில் அக்கறை அற்றவர்கள். இதனால் கொள்ளைச் சம்பவங்களை அவர்கள் பாதுகாப்பு அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்வதில்லை. பொருள் போனால் போகட்டும் உயிர் தப்பினால் போதும என்ற நிலை.

களவாடிய பொருள்கள் - பாரிய மரங்கள், வீட்டுத் தளபாடங்கள், கட்டடப் பொருள்கள் முதலியன - பகிரங்கமாக வாகனங்களில் எடுத்துச் செல்லப்படுகின்றன. காப்பரனில் உள்ள காவலர்களோ வேறு எந்த அலுவலரோ இவற்றைச் சோதனையிடுவதில்லை. அதற்கான உத்தரவு அவர்களுக்கு வழங்கப்பட்டதாகவும் தெரியவில்லை.

இந்த விடயம் தொடர்பாக இராணுவத் தலைமைப் பீடம், நாடாளுமன்ற உறுப்பினர், அரச அதிபர் ஆகியோருக்குச் செய்த முறைப்பாடுகள் எதுவும் கவனத்திற்கு




எடுத்துக் கொள்ளப்படவில்லை.

களவு, கொள்ளை, காடைத்தனத்திலே ஈடுபட்டுவரும் நபர்கள் யார்? இவர்கள் வறுமை காரணமாகத் திருடவில்லை. இந்த நாட்டில் வறுமைக் கோட்டுக்குக் கீழ்ப்பட்டவர்கள் என்று எவரும் இல்லை. சகலருக்கும் ஒவ்வொரு மூடை நிவாரணம் அரசினால வழங்கப்படுகிறது. இலவச வைத்தியம், இலவசக் கல்வி, இலவச பாடநூல்கள், இலவச சீருடை. எனவே கனம் உச்ச நீதிபதி சொல்வது போல வறுமை காரணமாக யாரும் திருட்டுத் தொழில செய்யவில்லை. பெற்றோருக்குத் தெரியாமலும் இத் தொழில் நடைபெறவில்லை. ஆகையால் பெற்றோர் கட்டுப்படுத்தலாம் என்பதும் தவறு. விழிபபுணர்வு தேவை என்று தலையங்கம் தீட்டியுள்ளீர்கள் இதனை யாருக்குச் சொல்கிறீர்கள்?

பிள்ளைகள் தாம் களவெடுத்த பொருள்களை வீட்டிலேதான் சேர்த்து வைக்கிறார்கள். கூரைத்தகடுகள், முகட்டோடு, கதவு நிலைகள் போன்றவை திருடர்களின் இல்லங்களில் குவியலாக உள்ளன. திருட்டுப் பொருள் வாங்கி விற்கும் வியாபாரிகளின் வீட்டிலோ, தொழிலகங்கலே உள்ளன.

திருடர் குழாம் திடீர் தோற்றம் அன்று. அவர்கள் பரம்பரைத் திருடர்; கல்வி வாசனை அற்றவர்; கடவுளை வழிபடாதவர்; மாறி மாறி எல்லாச் சமயத்திலும் இருப்பவர்; மற்றவர் துயரத்தைப் பற்றியும் கவலை அவர்களுக்கு இல்லை.

இத்திருடர் குழாம் பற்றிய விவரம் அயலவர்களுக்கு தெரியும். கிராம அலுவலருக்கும் தெரியும் மேலதிகாரிகளுக்கும் தெரியும். பொருள்களை பறி கொடுத்தவருக்கும் தெரியும். ஆனால் யாரும் அவர்களைத் தட்டிக் கேட்க முன்வரமாட்டார்கள். அவர்கள் குண்டர்கள்; பழிபாவத்துக்கு அஞ்சாதவர்கள்; தட்டிக்கேட்பவர் தண்டிக்கப்படுவர். காவல் துறைக்கு அறிவித்தவரின் தலை போகும்.

பொலீஸில் முறைப்பாடு செய்தால நீதிமன்றில் வழக்குத் தொடரும். சாட்சிக்கு யாரும் முன்வர மாட்டார்கள். இன்னற்படும் போது காவல்துறையினரும் உதவார். சட்டத்தரணிகளுக்கு தவணைக்கு பணம் கட்டிக் கொண்டிருக்க வேண்டும். இழந்த பொருள்களின் பெறுமதியை விட வழக்குச் செலவு அதிகம். ஆகையால் யாரும் நீதிமன்றம் போவதில்லை.

இந்த விடயம் திருடருக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் பொருள்களைக் கொள்ளையடிப்பதோடு பாதிக்கப்பட்டவர்களைத் தொடர்ந்து அச்சுறுத்தி வருகிறார்கள்.

யாரும் துணையில்லை. கடவுளை வேண்டுவதல்லால் வேறு வழியில்லை. திருட்டுக் குடும்பத்தில் நிம்மதி இருக்காது. செய்த பாவத்துக்கான தண்டனையை கடவுள் அவர்களுக்கு அழித்துக் கொண்டே இருக்கிறான். இந்த நம்பிக்கையிலே தான் மக்கள் நிம்மதியாக வாழ்கிறார்கள்.

**கணபதி மகேசன்**
சைவநெறித் தொண்டர் கழகம்
*யாழ்ப்பாணம்.*



வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் அண்மையில் நான்காவது தடவையாக இலவச கண்ணாடி வழங்கும் விழா நடைபெற்றது.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ருபானந்தா அந்த விழாவில் கலந்து கொண்டு ஆசீர்வதித்து வயோதிபப் பெண் ஒருவருக்கு மூக்குக்கண்ணாடியை அணிவிப்பதை படத்தில் காணலாம். மாவட்ட வைத்திய அதிகாரி எஸ்.மயிலேறும் பெருமாளும் அருகில் உள்ளார். (ஐ)

## போரில் அழிந்த கட்டடங்களைப் புனரமைக்க கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு ஒதுக்கிய நிதி திடீரென நிறுத்தம்!

யாழ்ப்பாணம்,ஏப்.1

யாழ்.மாவட்டத்தில் கடந்த கால அனர்த்தங்களினால் சேதமடைந்த 10 கிராம அபிவிருத்திச்சங்கக் கட்டடங்களைப் புனரமைப்புச் செய்வதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட 4 லட்சம் ரூபா நிதி நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு சங்கக் கட்டடத்துக்கும் 40 ஆயிரம் ரூபா வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டபோதும் பின்னர் இதனை வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் நிறுத்தி விட்டதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, வடக்கு-கிழக்கு கிராம அபிவிருத்தித் திணைக்களத்துக்கு இந்த ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதியில் மூன்றிலொரு வீதம் குறைக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டதால் யாழ். மாவட்டத்தில் சிறு அளவிலான வேலைத்திட்டங்களே கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை -

கால்நடை வளர்ப்பு, உணவு தயாரிப்பு, கோடியல் தயாரிப்பு, நல்லெண்ணெய் உற்பத்தி போன்ற திட்டங்களை மேற்கொள்வதற்கு 5 லட்சத்து 60 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை, வேலணை, உடுவில், நெடுந்தீவு, சங்கானை, பருத்தித்துறை, நல்லூர், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை போன்ற இடங்களிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மூலம் இத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன. (க-5)



இருபாலை கிழக்கு ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது. வலி.கிழக்கு பிரதேச சபையின் உபதலைவர் யு.எல்.ஏ.ரவி மங்கள விளக்கேற்றுவதை படத்தில் காணலாம். பிரதேசசபையின் செயலாளர் க.குகதாசன், தலைவர் பூ.குணசிங்கம், சனசமூக நில்யத் த்லைவர் சி.தங்கவடிவேல், செயலாளர் இ.ரகுமார் ஆகியோர் அருகில் உள்ளனர். (ஜ-10)

### கல்வளை ஆலயத்தில் திருட்டு

யாழ்ப்பாணம்,ஏப்.1

சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் ஆலயத்தின் மூலஸ்தானம் உடைக்கப்பட்டு அங்கு இருந்த பெறுமதிமிக்க பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மூலஸ்தான பிள்ளையார் விக்கிரகம் அகற்றப்பட்டுள்ளதுடன் அம்மனின் நெற்றிப் பொட்டு மற்றும் உண்டியலில் இருந்த ஒரு தொகைப் பணம் போன்றவை அபகரிக்கப்பட்டுள்ளன.

சண்டிலிப்பாய்ப் பகுதியில் கடந்த தினங்களாகத் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. (க-17)

### சுன்னாகம் ஐக்கிய நாணய சங்கம் புனரமைப்பு

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக செயலிழந்திருந்த சுன்னாகம் ஐக்கிய நாணய சங்கம் புனரமைக்கபபட்டுள்ளது.

கடந்த மாதம் 15ஆம் திகதி இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (க-9)

உயர் நீதிமன்ற நீதியரசராகப் பதவியேற்ற பின்னர் தமது முதலாவது அமர்வில் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழில் உரையாற்றி இருந்தார் - கடந்த மாதம் ஏழாம் திகதியன்று.

இலங்கை உயர்நீதிமன்ற வரலாற்றில் நீதியரசர் ஒருவர் தமிழில் உரையாற்றியது இதுவே முதல் தடவையாகும்.

அதனை வியந்து முன்னாள் நீதிபதி ஒருவர் வடித்திருக்கும் கவிதைகள் இவை. முதலில் தமிழையும் பாடி, பின்னர் நீதியரசரைப் புகழ்ந்து பாடுகிறார் நீதிபதிக் கவிஞர்.

## சாவதும் உண்டோ? சொல்வாய்? தமிழ்ப் பணி செய்தவர்கள்?

முடிஅணி வேந்தர் மூவர்
மடிமிசை தவழ்ந்த தாயே!
அடிபணிந் தரசர் எல்லாம்
அரியணை ஏற்றி நின்றார்
கடிகமழ் மலர்கள் தூவி
கவின்பெற பணிந் தாரன்றோ
முடிவிலாஉன் புகழை யெல்லாம்
மூவுலகதும் போற்றிற் றன்றோ

அட இவன் அழகிற் கீடாய்
அவனியில் எது தாவுண்டு
உடன் இவள்தரு சுவையைக் கேட்க
ஊறிடும் உமிழ்நீர் நாவில்
கடலினும் பெரிதா மன்றோ
கன்னியின் அறிவுச் சொத்து
மடமயில் இவளோ நல்கும்
மதிவளம் மதுர மன்றோ

ஈழத்து அரியணை தன்னில்
இவளுக்கு இடம் தானேது
வளம்பல இருந்து மென்ன
வாடினாள் வருந்தி நொந்தாள்
உளமது கொதித்து வேக
உணர்வினை இழந்தாள் அன்னை
முழங்கிடு முரசம் கொட்ட
மூண்டது முடிவிலாப் போர்.

சேரனை நிகர்த்த நேர்மை
சோழனை ஒத்த நீதி
பார் புகழ் பாண்டியனை
பழித்திடும் பக்தி மிக்கோய்
வீரத்தில் ஈழ மறவர்தம்மோடு
இணையென சொல்ல வல்லாய்
அருனக் கீடாய் நிற்பர்நீதி
அறத்தினைக் காப்பதற்கே!

நீதியின் உச்சி யாகும்
நீதி மா மன்றதனில்
ஆதியாய் வாழ்ந்த எங்கள்
அன்னையைக் கூட்டிச் சென்று
வேதனை கொள்வ தேனோ?
வெந் துயர் விடுதியென்று
பூதலம் வியந்து நின்று
போற்றிட அன்னையாளை
நீதியாம் தேவதை முன்
நிறுத்தினாய்! நீதி கண்டாய்!

சாதனை புரிந்து நிற்கும்
செம்மலே! வாழ்க நீடு!
வேதனை போக்கிய நின்
வெற்றியே வெற்றியாகும்
போதனை கேட்டு நின்றோம்
பூரித்தோம் பூதலம் வியந்ததன்றோ?
மாதவப் புதல்வன் நீயே!
மறக்குல மாதரசியார்க்கு
சாவதும் உண்டோ? சொல்வாய்
தமிழ்ப் பணி செய்தவர்க்கு!

- மூ.திருநாவுக்கரசு
(முன்னாள் நீதிபதி)

## யாழ்.பல்கலைக்கழகத்தின் பௌதிக விஞ்ஞானத்துறைக்கு மேலும் 14 மாணவர்கள் தெரிவு

யாழ்ப்பாணம்,ஏப்.1

யாழ்.பல்கலைக்கழக பௌதிக விஞ்ஞானத்துறைக்கு, மூன்றாவது குறைநிரப்புப் பட்டியல் மூலம் 2000/2001 ஆம் கல்வியாண்டுக்கு மேலும் 14 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் அனைவரும், எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை யாழ்.பல்கலைக்கழக பதிவாளருடன் தொடர்பு கொண்டு பதியுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

குறைநிரப்புப் பட்டியல் மூலம் தெரிவு செய்யப்பட்டிருக்கும் மாணவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

பி.அகிலன் (4ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு), ஆர்.ரகுபாலன் (அராலி வடக்கு), எம்.சஞ்ஜீவன் (அரசடி வீதி, திருநெல்வேலி), வி.சுரேஸ் (புலோலி தெற்கு), எஸ்.முகுந்தன் (பத்தைமேனி),

எம்.சியாமளன் (சுதுமலை தெற்கு), எம்.தயாபரன் (ரயில் நிலைய வீதி, மல்லாகம்), வி.விராஜன் (கோண்டாவில் மேற்கு), ஆர்.தவரூபன் (செருக்கப்புலம், தெல்லிப்பழை), என்.நிசாந்தன் (வெள்ளவத்தை), எஸ்.சுதர்சன் (கரந்தன் நீர்வேலி), ரி.பத்மரூபன் (பெரிய பளை, பளை), செல்வி என்.துரைரட்ணம் (ஆனைக்கோட்டை), செல்வி எஸ்.சின்னத்துரை (உயிலங்குளம், வவுனியா) இவர்கள் அனைவரும் பிரயோக விஞ்ஞான கற்கை நெறிக்காக யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்துக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(க-6)

## 31ஆம் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

தோற்றம் 10 - 08 - 1915



மறைவு 02 - 03 - 2001

### திருமதி ஆறுமுகம் பொன்னம்மா

அன்னாரின் அந்தியேட்டி சபீண்டிகரணக் கிரியைகள் இன்று (01-04-2001) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடை பெறவிருப்பதால், அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*"பொன்முகவாசா"*
*உடுப்பிட்டி.*

- குடும்பத்தினர்.

(86123)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஊர்காவற்றுறைப் பிரதேசசபைத் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான

### உயர்திரு.ந.மதனராஜா (ஜே.பி)

அவர்கள் அண்மையில் அகில இலங்கைச் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். அவரது சேவைகள் தொடர எல்லாம் வல்ல இறைவனின் அருள்வேண்டி வாழ்த்துகின்றோம்.

*வேலணை மேற்கு - 6,*
*வேலணை.*

சி.விஸ்வலிங்கம் குடும்பம்.

(86101)

## திருமண நன்றி நவில்வு

நேற்று (31.03.2001) சனிக்கிழமை சண்டிலிப்பாய் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற, எமது திருமண வைபவத்துக்கு வருகை தந்து எம்மை ஆசீர்வதித்து நல்லாசிகள் நல்கிய உறவினர்கள், நண்பர்கள், மற்றும் திருமண வைபவத்தை நடத்த உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### வோல்ற்றர் ஏஞ்சலோ - பிரதீபா

புதுமணத் தம்பதியினர்

*சங்கானை மேற்கு,*
*வடலியடைப்பு.*

குறிப்பு: இன்று (2001.04.01) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணியளவில், வடலியடைப்பிலுள்ள மணமகள் இல்லத்தில் வரவேற்பு உபசாரம் நடைபெறும்.

(86085)

## வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்வதற்கு இம்மாதம் 29 ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டோரின இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

(182606ஏ) (183515ஏ) (183516ஏ)
(183517பி) (184972ஏ) (186733ஏ)
(186733பி) (186733சி) (186733டி)
(186747ஏ) (186747பி) (186833ஏ)
(187025ஏ) (187025பி) (187025சி)
(187193ஏ) (187193பி) (187211ஏ)
(187222ஏ) (187222பி) (183517ஏ)

**நல்லூர்**

(185027ஏ) (185224ஏ) (185224பி)
(186734ஏ) (186777ஏ) (186849ஏ)
(186849பி) (186928ஏ) (186928பி)
(187137ஏ) (187137பி) (187155ஏ)
(187217ஏ) (187217பி) (186217சி)

**சண்டிலிப்பாய்**

(185026ஏ) (186741ஏ) (186842ஏ)
(186842பி) (186842சி) (186843ஏ)
(187029ஏ) (187040ஏ) (187104ஏ)
(187162ஏ)

**தெல்லிப்பளை**

(169428ஏ) (169428பி) (169428சி)
(169428டி) (183206ஏ) (183206பி)
(184910ஏ) (186731ஏ) (186731பி)

**உடுவில்**

(175897ஏ) (180322ஏ) (180322பி)
(180323ஏ) (180328ஏ) (180329ஏ)
(180329பி) (181652ஏ) (181652பி)
(181652சி) (183270ஏ) (183270பி)
(183466ஏ) (183466பி) (185058ஏ)
(187113ஏ) (188767ஏ) (188767பி)
(188767சி)

**சங்கானை**

(157168ஏ) (171494ஏ) (187701ஏ)

**யாழ்ப்பாணம்**

(171355ஏ) (171362ஏ) (184228ஏ)

**கரவெட்டி**

(171491ஏ)

**கோப்பாய்**

(168420ஏ) (168420பி) (168420சி)
(170682ஏ) (170739ஏ) (173206ஏ)
(173206பி) (177478ஏ) (180654ஏ)
(180684ஏ) (180684பி) (180815ஏ)
(180815பி) (180848ஏ) (180848பி)
(180848சி) (180848டி) (180903ஏ)
(180903பி) (180921ஏ) (180944ஏ)
(180944பி) (180956ஏ) (180963ஏ)
(180963பி) (180966ஏ) (180966பி)
(180971ஏ) (180997ஏ) (182883ஏ)
(182883பி) (182939ஏ) (182939பி)
(182939சி) (182966ஏ) (182966பி)
(182966சி) (182975ஏ) (182975பி)
(182983ஏ) (182983பி) (184031ஏ)
(184031பி) (184031சி) (184031டி)
(184031ஈ) (184176ஏ) (184176பி)
(184176சி) (184177ஏ) (184177பி)
(184229ஏ) (184231ஏ) (184231பி)
(184241ஏ) (184241பி) (184254ஏ)
(184254பி) (184254சி) (184264ஏ)
(184264பி) (184279ஏ) (186339ஏ)
(186348ஏ) (186349ஏ) (186364ஏ)
(186364பி) (186391ஏ) (186392ஏ)
(186431ஏ) (186432ஏ) (186436ஏ)
(186438ஏ) (186438பி) (186438சி)
(186438டி) (186534ஏ) (186539ஏ)
(186565ஏ) (186565பி) (186569ஏ)
(186569பி) (186596ஏ) (186599ஏ)
(186599பி) (186617ஏ) (186618ஏ)
(186618பி) (186670ஏ)

**நல்லூர்**

(145342ஏ) (157169ஏ) (170684ஏ)

(170712ஏ) (170713ஏ) (170714ஏ)
(171004ஏ) (171154ஏ) (171171ஏ)
(171175ஏ) (171244ஏ) (171245ஏ)
(171299ஏ) (171348ஏ) (171349ஏ)
(171356ஏ) (171357ஏ) (171361ஏ)
(171487ஏ) (171489ஏ) (171500ஏ)
(177262ஏ) (179703ஏ) (179703பி)
(179703சி) (179703டி) (179713ஏ)
(179713பி) (179713சி) (179773ஏ)
(179773பி) (179773சி) (179773டி)
(179774ஏ) (179789ஏ) (179796ஏ)
(179796பி) (184070ஏ) (184191ஏ)
(184191பி) (184196ஏ) (184203ஏ)
(184223ஏ) (184223பி) (184223சி)
(184235ஏ) (184243ஏ) (184244ஏ)
(184244பி) (184255ஏ) (184255பி)
(184273ஏ) (184276ஏ) (184276பி)
(184314ஏ) (187301ஏ) (187301பி)
(187402ஏ)

**பருத்தித்துறை**

(171379ஏ)

**சண்டிலிப்பாய்**

(170681ஏ) (171490ஏ) (171498ஏ)
(171499ஏ)

**தெல்லிப்பளை**

(180951ஏ) (184242ஏ) (184242பி)
(186615ஏ)

**தென்மராட்சி**

(182956ஏ) (182956பி)

**உடுவில்**

(171358ஏ) (184147ஏ) (184170ஏ)
(184172ஏ)

(க-10)

## வெள்ளவத்தை ரயில் விபத்தில் பம்பலப்பிட்டி இந்து மாணவனின் கால் துண்டிப்பு

கொழும்பு,ஏப்.1

கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மாணவன் ஒருவர் நேற்று முன்தினம் காலை வெள்ளவத்தையில் இடம்பெற்ற ரயில் விபத்தில் கால் ஒன்றை இழந்துள்ளார்.

மொரட்டுவயில் உள்ள தனது வீட்டிலிருந்து ரயில் மூலம் வெள்ளவத்தைக்கு வந்த இவர், ரயில் கடவையைக் கடக்க முற்பட்ட போதே பின்னால் வந்த ரயிலால் மோதுண்டார்.

இவர் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தரம் 12 இல் கல்வி கற்கும் மணிவாமன் எனும் மாணவரே விபத்தில் கால் இழந்தவர் ஆவார்.

(க)


UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

**DIPLOMA COURSE IN PHYSICAL EDUCATION**

Applications are invited from qualified persons who wish to register for the above course in the University of Jaffna.

**Requirements:**

1. Should be in the age group 18-28 years.
2. Should have a minimum of three passes in the G.C.E. (A/L).
3. Eligibility to apply for University admission in Sri Lanka and the selection will be made by a written examination and practical assesment conducted by the University.
4. Should pass the oral examination.

**Note**: Preference will be given to those candidates who have participated in sports and athletics and won places at District and National level.

5. The University Senate may relax the age requirement in the case of the candidates who are already in the sports profession in Government and non Government Sectors.

**Course Fee : Rs.5,000/-per year**
**Duration : Two years**
(Internal Full time)

Application forms and handouts could be obtained from the Assistant Registrar/Exam & Admissions Branch, University of Jaffna on a payment of Rs.50/-. Duly filled application forms should be submitted to the Assistant Registrar, Examinations & Admissions Branch, University of Jaffna on or before 1st of May, 2001.

Registrar.

(C/15991)


## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 - 07 - 1925



உதிர்வு 01 - 04 - 1995

### அமரர் பொன்னையா சிங்கராயர்

குடும்பத்தின் ஒளி விளக்காய்
அன்புடனும் பண்புடனும்
எம்மை வழிநடத்திய தெய்வமே!
ஆண்டுகள் ஆறு ஓடி மறைந்தாலும்
உமது ஆத்ம சாந்திக்காய் என்றும் பிரார்த்திக்கின்றோம்.

*சூசையப்பர் கோயில் வீதி,*
*அச்சுவேலி.*

*உமது பிரிவால் துயருறும்*
மனைவி, மக்கள், சகோதரன்.

(86102)

## மரண அறிவித்தல்

### பொன்னையா வாதவூரன்

(Rtd - Chief Clerk, Railway Department)

அச்சுவேலி தெற்கு, சிவசக்தி கோயிலடியைச் சேர்ந்த பொன்னையா வாதவூரன் நேற்று (2001-03-31) சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - பொன்னம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வனும், கௌரி, காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நாகேந்திரனின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (2001-03-31) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12மணியளவில் தகனக்கிரியைகள் அச்சுவேலி தெற்கு முழக்கன் மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

*சிவசக்தி கோயிலடி,*
*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.*

தகவல்:
நாகேந்திரன் கௌரி
(சகோதரி)

(C/15997)

# நல்லாட்சியில் முதலாவது ஆதீனத்தை நிலைப்படுத்திய நல்லைக் குருமணி!

*நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமுதல்வர் நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் 20 ஆவது ஆண்டு குருபூசை ஆராதனை விழா இன்று ஞாயிற்றுக்கிழமை நல்லூரில் நடைபெறுகின்றது. அதனை ஒட்டி இந்தச் சிறப்புக் கட்டுரை வெளியிடப்படுகிறது.*

செந்தமிழும் சிவநெறியும் செழுமையுற்றுச் செழிக்கின்ற சைவத்திருமடங்கள் தென்னகத்தில் பலவுண்டு. இவை ஆதீனங்கள் என அழைக்கப்படுகின்றன. நமது ஈழத் திருநாட்டில் நல்லைநகர் ஆறுமுகநாவலர், சுவாமி ஞானப்பிரகாசர், சுவாமி விபுலானந்தர் போன்றவர்கள் தோன்றி நாளும் இன்தமிழால் சைவ நன்னெறி தழைத்தோங்கப்பாடுபட்டபோதும் 1966ஆம் ஆண்டிற்கு முன்னர் ஆதீனங்கள் எவையும் அமைக்கப்படவில்லை. மணிஐயர் என்றும் C.SS மணிபாகவதர் என்றும் முத்தமிழ்மணி என்றும் பின்னர் நல்லைக் குருமணி என்றும் புகழ்

## பிரசங்க மாரி பொழிந்து சைவத்துக்குப் பெருமை சேர்த்தவர்

பெற்ற பெருமகனார் அவர்களால் முதன்முதலாக நல்லூரில் 1966ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் கார்த்திகை நட்சத்திரம் கூடிய சுபவேளையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் திருநிலைப்படுத்தப்பட்டதாக அறியக்கிடக்கிறது. நல்லைக் குருமணியின் ஆளுமைமிக்க இச் சீரிய சைவப்பணியானது சைவத்தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் நல்ல ஊக்கத்தையும் உலகையையும், பேரார்வத்தையும் ஏற்படுத்தியது எனலாம்.

குருமணி அவர்களின் வாழ்க்கையும் வளமும் பற்றி அறிந்தவற்றையும் தெரிந்தவற்றையும் இச் சந்தர்ப்பத்தில் சிவநெறியே சிந்திக்கும் அன்பர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்பியமையே இக்கட்டுரையின் நோக்கமாகும். இங்கு குறிப்பிடுபவற்றை மேலும் நிறைவாக்க ஏதேனும் இருப்பின் அவற்றையும் வாசகர்கள் ஒன்றாகச் சேர்த்துத் தெளிந்துகொள்வது விரும்பத்தக்கது.

### பிறப்பு

நல்லைக் குருமணி அவர்கள் 1918ஆம் ஆண்டு தைத்திங்கள் பூராடம் நட்சத்திரம் கூடிய சுக்கிர வாரத்தன்று பிரம்மஸ்ரீ செல்லையர் தம்பதிகளுக்கு தலைமகனாக வண்ணார் பண்ணையில் பிறந்தார். இவருக்கு தந்தை தாயார் இட்ட பெயர் சிவசுப்பிரமணியஐயர் என்பதாகும். இவருடைய குடும்பம் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் நித்திய, நைமித்திய கருமங்களில் ஈடுபாடு காட்டி வந்தனர். அதனால் வைத்தீஸ்வரன் வாலாம்பிகை சமேதரிடம் அனந்த பக்தியுடையவராகச் சிவசுப்பிரமணியர் வளர்ந்தார். இவர் தமது இளநிலைக் கல்வியை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் பெற்றார். அங்கே சுவாமி விபுலானந்தர் போன்ற ஆசிரியர்களின் அரவணைப்பிற்கும் நல்லாசிகளுக்கும் உரியவரானார். இவருடைய பேரனாரான மகாவித்துவான் பிரம்மஸ்ரீ கணேச ஐயர் அவர்களின் நெறிப்படுத்தலில் இவர் கல்வி கேள்விகளில் அதிக சிரத்தை காட்டினார். இளநிலைக் கல்வி முடிவடைந்து இடைநிலை மற்றும் உயர் இடைநிலைக் கல்வியைப் பெறும் பொருட்டு யாழ்ப்பாணம் இந்துக கல்லூரியில் சேர்ந்தார். அங்கே அவரிடம் அடங்கிக் கிடந்த ஆற்றல்களுக்கு உந்துதலும் உத்வேகமும் கிடைத்தன. ஏற்கனவே இவருக்குச் சங்கீத ஆர்வம் இருந்தது. பதினெட்டாம் வயதில சங்கீதத்தை முறையாகக் கற்றுத் தேறினார். பள்ளிக்கூடத்தில நந்தனார், சத்தியவான சாவித்திரி, பிரகலாதன் போன்ற நாடகங்களில் நடித்தும், ஏனைய மாணவர்களுக்கு நாடகப் பயிற்சி அளித்தும், நாடகங்களை அரங்கேற்றியும் அதிபர் மற்றும் ஆசிரியர்களினதும் பெருமதிப்பிற்கு ஆளானார். அப்போது அதிபராக இருந்த திரு.குமாரசாமி அவர்கள் இவரது திறமைக்காக இரண்டு வருடம் இவரின் படிப்பிற்கான செலவுகளை ஏற்றுக்கொண்டதாகவும் தெரியவருகிறது. பாடசாலை காலையில் ஆரம்பிக்கும் போதும் மாலையில் முடியும் போதும் இறைபூசை செய்து தேவாரம் பாடும் பொறுப்பும் இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர் லண்டன் மெட்றிக்குளேசன் பரீட்சைக்குப் படிக்கும்போது பாடசாலைக்கு வருகை தந்த தமிழக அரசியற் தலைவர் திரு.சத்தியமூர்த்தி அவர்கள் இவருடைய பண்ணிசை மற்றும் ஒவியுத் திறன்களைப் பாராட்டினார் எனவும் அறியக்கிடக்கிறது. "கல்கி" அவர்களின் ஆசியும் இவருக்குக் கிடைத்தது.



அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் சங்கீத கதாப் பிரசங்கம் நடத்துவதில் சங்கர சுப்பைய சுவாமிகளும், சங்கானைச் சுவாமிகளும் பிரபல்யமானவர்கள் என்றும் அவர்களைப் போல் தாமும் இன்னிசைக் கதை சொல்ல (சங்கீத கதாப்பிரசங்கம்) மணி ஐயர் ஆசைப்பட்டு அவ்வாறே தம்மை அந்தக் கலைக்கு ஆளாக்கினாரென்றும் சொல்வர்.

அந்தக் காலப்பகுதியில் இவர் திருமணம் செய்து கொண்டு நல்லறம் புரிந்து புதல்வனையும் பெற்றார். என்றாலும் அவருடைய மனம் சமயம், கலை என்ற துறைகளிலேயே ஈடுபாடுகொண்டது. கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் இவருடைய நாடகத் திறமையை அறிந்து தம்முடைய குழுவில் இவரை இணைத்தார்.

இவருடைய ஆற்றலை அறிந்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி நிர்வாகத்தினர் இவரை சங்கீத ஆசிரியராக நியமித்தனர். சில வருடங்கள் அப்பணியில் அமர்ந்தார். மேறகத்திய இசையைக் கற்பிக்கவேண்டிய நிலை ஏற்பட்டதால் ஏற்பட்ட விருப்பமின்மை காரணமாக அப்பணியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டார். அப்போதிருந்த கல்வி அமைச்சின் செயலாளர் திரு.கனகரெத்தினம் அவர்கள், இவரை மதுரை திருஞானசம்பந்த ஆதீனச் சன்னிதானம் அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார் என்பர். அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் பிரபலமான ஆலயங்களில் சங்கீத கதாப்பிரசங்கங்கள் செய்துவந்தார். அப்போது அவருக்கு வயது இருபது. இவருடைய பிரசங்க அரங்கேற்றம் வண்ணை சிவன் கோயிலில் 1940ஆம் ஆண்டு

(8ஆம் பக்கம் பார்க்க)

**நா.க.சண்முகநாதபிள்ளை**

# தியானமே நல்வாழ்வுக்கான சாதனம்; அதை அன்றே உணர்த்தியவர் 'யோகர்'

**சிவயோக சுவாமிகளின் 36 ஆவது குருபூசையை ஒட்டிய விசேட நிகழ்ச்சிகள் இன்று முதல் நான்கு தினங்களுக்கு யாழ்.சிவதொண்டன் நிலையத்தில் நடைபெறவுள்ளன. இதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

நிகழும் விக்கிரம வருடம் பங்குனித திங்கள் 22ஆம் நாள் (04.04.2001) ஆயிலிய நட்சத்திரத்தன்று தவத்திரு யோக சுவாமிகளின் 36ஆவது குருபூசை கொண்டாடப்படவுள்ளது. இதற்கு முன்னோடியாக முதல் மூன்று தினங்களிலும் சுவாமிகளது அருளமுதமான நற்சிந்தனை பூரண பாராயணம், ஆச்சிரம வாழ்வு தியானம் என்பன நிகழவுள்ளன. நற்சிந்தனைப் பாடல்கள் அடியவர்களால் ஒழுங்கு முறையில் இசையுடன் பாடப்படும். இந்நிகழ்வில் பங்குபற்றும் அடியவர் 'ஆச்சிரம வாழ்வு' என்னும் நியதிப்படி ஒழுகுவர். சிவதொண்டன் நிலையத்தில் தங்கி அங்கு நான்கு தினங்களிலும் நிகழும் நிகழ்வுகளில் பங்குபற்றி வீட்டுப்பற்று, சிந்தனைகளை நீக்கி இறைவன்பால் சிந்தையை நிறுத்தி அடியார் குழாத்துடன் அளவளாவி பொழுதினைத் தவப் பொழுதாகக் கழிப்பர்.

'தியானம்' ஆச்சிரம வாழ்வின் முக்கியமான நிகழ்வாகும். கடவுள் இறைவனுக்குத் தமிழில் வழங்கும் சொல் கட - உள். நமது மனத்தினுள்ளே கடந்தால் காணப்படுவதே கடவுள். ஐம புலன்களை அடக்கி மனத்தினை - சிந்தனையை உள்ளே கடத்தல் ஆத்ம சிந்தனை எனப்படும். இதுவே தியானம் என்றும் வழங்கப்படுகிறது. தியானத்தின் சிறப்பை எல்லா மதங்களும் வலியுறுத்துகின்ற அதேவேளையில் தியானம் செய்வது கட்டாயக் கோட்பாடாக நிர்ணயிக்கப்பட்டும் வருகின்றது. நம் முன்னோர்கள், முனிவர்கள் தியானம் பற்றி ஆராய்ந்து தங்கள் அனுபவங்களைப் பல நூல்களில் விரிவாகத் தெளிவு படுத்தியுள்ளார்கள். பகவத் கீதை, திருமந்திரம், சைவத்தோத்திரங்கள் மற்றும் யோக சுவாமிகளது நற்சிந்தனை போன்ற நூல்களில் தியானம் நன்கு விவரிக்கப்பட்டுள்ளது.

### விஞ்ஞானத்தில் தியானம்

ஆரம்ப காலங்களில் தியானநிலை பற்றி விஞ்ஞானம் எவ்வித உற்சாக

## ஆரோக்கிய வாழ்வுக்கு அதைவிட வழியுண்டா?

மும் காட்டவில்லை. தியானம் மதங்களுடைய வெறும் சடங்கு என்றே கருதப்பட்டது. ஆனால் விஞ்ஞானத்தின் துரித வளர்ச்சி, ஆராய்ந்துணர்தல் போன்றவற்றால் இதுவரை தியானம் என்பது மதம் சம்பந்தப்பட்டதன்று; மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத பெருஞ்சாதனம் என்ற முடிவுக்கு இட்டுச் சென்றுள்ளது.

உயிர்ப் பரிணாம வளர்ச்சியில் ஏனைய உயிர்களிடத்து இல்லாத பல்வேறு சிறப்பியல்புகள் மனிதரிடத்தே காணப்படுகின்றன. எதிரடையும் கைப்பெருவிரல், சுழலக்கூடிய கைகள், ஆற்றல் மிக்க மூளை என்பன அவற்றுள் சில. இதன் மூலம் புத்தாக்கத்திறன், கண்டுபிடிக்கும் திறன் அறிவைத் திரட்டி வழங்கக் கூடிய ஆற்றல், அழகியல் உணர்வு, ஆன்மீக உணர்வு, மனம் என்பன பன்முகப் பரிமாணமடைந்துள்ளன.

மனித வாழ்வில் மூன்று விதமான இயற்கை நிலைகள் உள்ளன. அவையாவன விழிப்பு நிலை, தூக்கநிலை, கனவு நிலை இம்மூன்று நிலைகளிலும் பல்வேறு உடற்றொழிலியல் மாறறங்கள் உடலில் ஏற்படுகின்றன. இரத்த அழுத்தம், இரத்தத்தில் சர்க்கரைச் சத்து மற்றும் மூளையில் தோன்றும் அலைகளின் மாறுதல் என்பன சில. தியான நிலையானது மேற்கூறிய மூன்று நிலைகளிலும் அல்லாத தனிப்பட்ட நிலையாகக் கருதப்படுகிறது. இதன்போது ஏற்படும் மூளை அலைகள் தனித்துவம் உடையன. இதனையே மனதின் நான்காம் நிலை எனக் குறிப்பிடுகின்றனர். விழிப்பு நிலையில் மனித உடல் வேலை செய்கின்றது. இதன்போது மனிதன் தன் நினைவு நிலையை இழப்பதில்லை ஆனால் உறக்க நிலையில் தன் நினைவை இழக்கிறான். உடலுறுப்புகளும் நிதானத்தை இழந்து ஓய்வு கொள்கின்றன.

தியான நிலையில் மனிதன் தன் நினைவை இழப்பதில்லை. ஆனால் உடல் உறுப்புக்களும் மூளையும் தூக்க நிலையிலுள்ளது போன்று அமைதி கொள்கின்றன. இதனாலேயே இந்நிலை விழித்துறங்கும் நிலை எனவும் கூறப்படுகிறது. இதன்போது இரத்த அழுத்தம் குறைகிறது. மூச்சு தளர்கிறது. இரத்தத்தில் இலக்றிக் அமிலம் என்னும் நச்சுப் பதார்த்த அளவு குறைகிறது. தோலின் மின் தடைச் சக்தி அதிகரிக்கிறது. இவை யாவும் உறக்க நிலைக்குரியவையாகின்ற போதிலும் மனிதன் தன் விழிப்பு நிலையிலேயே இருக்கின்றான்.

தியான நிலையினால் மனிதனுக்கு ஏற்படும் அனுகூலங்கள் என்ன?



யோக சுவாமிகள்

உயிர் வாழ்வதற்குத் தூக்கம் அவசியமாகின்றது. இதனால் உடல் புத்துணர்ச்சி பெறுகின்றது. இத்தன்மை தியானத்தாலும் ஏற்படுகிறது. தற்கால வாழ்க்கை முறை சிக்கல் நிறைந்தது. மன அமைதிக் குறைபாடுகளால் உடல் ஊறுகள் ஏற்படுகின்றன. இதற்குத் தகுந்த மருத்துவம் சார்ந்த சாதனம் தியானமே.

தியானம் செய்வதற்குப் 'பிரம முகூர்த்தமே' சிறந்த நேரமாகக் கொள்ளப்படுகிறது. இவ்வேளை அதிகாலை நான்கு மணி முதல் ஆறு மணி வரையாகும். புற உலகின் கவன ஈர்ப்பைக் கலைத்தலுடன் தியானம் ஆரம்பமாகிறது. நிமிர்ந்து அல்லது சிறிது முன நோக்கிச் சரிந்திருக்க, மடிந்துள்ள முழந்தாளின் மேல் மடித்த கை விரல்கள் மிருதுவாகத் தரித்து நிற்கும் உட்பற்சமநிலையின் நடுநாயகமாக விளங்குவது முள்ளந்தண்டு. இம்முறை பண்டைய யோகிகள் கண்ட இருக்கை முறை. இதன்போது ஏற்படும் தசைநார் இறுக்கத்தை உள்ளத்தால் மேற்பார்வை செய்யலாம். புற உலகக் கவனக் கலைப்பான்களில் கண் வசப்படாமலிருக்க கண்களை மூடிக் கொண்டு தியானமாயமரலாம்.

'பிராணாயாம்' எனப்படும் சுவாச ஒழுங்கு முறை உள ஒடுக்கத்திற்கு இன்றியமையாதது. பிராணாயம் சிறந்த பயிற்சி மூலமே மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே தியானத்தின் போது உள்ளத்தை ஒடுக்க இதனை மேற்கொள்ளலாம்.

### சமாதிநிலை

தியான நிலையின் எல்லையே சமாதி. இந்நிலையில் மனத்தின் எண்ண அலைகள் முழுவதும் மறைந்து போகின்றன. புலனாற்றல் முழுவதும் ஒடுங்கி அவன் யோகியாகின்றான். இதன்போது பல நாள்கள் உணவின்றி, உறக்கமின்றி சுவாசித்தலின்றி அவனால் இருக்கமுடியும். தியான நிலையின் சிகரத்தை எட்டிய பலயோகிகள் பல அபூர்வ சாதனைகளைப் புரிந்துள்ளார்கள்.

தியானம் யோகிகளுக்கு மட்டுமல்ல, ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத நல்வாழ்வுச் சாதனம். எனவே தற்கால உலகியல் வாழ்க்கைமுறைக்கு தியானம் இன்றியமையாத தாகிவிட்டது. இவற்றையெல்லாம் தீர்க்க தரிசனப் பார்வையாலே உணர்ந்த தவத்திரு யோக சுவாமிகள் தம் அடியார்க்கென அமைத்த சிவத்தொண்டன் நிலையங்களில் தியானம் செய்வதற்கென மண்டபங்களை அமைத்துள்ளார். அத்துடன் தமது அநுபூதி அனுபவப் பாடல்களான நற்சிந்தனையில் 'தியானம்' பற்றிக் குறிப்பிட்டு தியானம் செய்வதற்குரிய வழிமுறைகளையும் சுட்டிக்காட்டியுள்ளார். "அவனே நான் என்று சொல்லித் தியானம் செய்வாய தினமும்..." என்ற பாடல் அதற்குச் சான்றாகும்.

எனவே, யோக சுவாமிகள் குருபூசைத் தினத்தில் அவரது 'தியானம்' பற்றிய கருத்துகளை உள்வாங்கித் தினமும் சிறிது நேரமாவது வெளி உலகை மறந்து புலன்களை அடக்கி எண்ண அலைகளை நிறுத்தி மனதை ஒரு முகப்படுத்துவோமாக.★

**இ.குகானந்தன்**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

வெஸ்கோ மருந்தகத்தின் உரிமையாளரும்,
கொக்குவில் லயன்ஸ் கழகத் தலைவருமாகிய
திரு. க. மு. பத்மநாதன் அவர்களின் அருமைத் தாயார்

**திருமதி முருகேசு நாகரெத்தினம்**

அவர்கள் கடந்த (03-02-2001) இல் சிவபதமடைந்ததையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் இன்று (01. 04. 2001) ஞாயிற்றுக்கிழமை அவரது 31 ஆம் நினைவு நாளில் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**வெஸ்கோ மருந்தக ஊழியர்கள்,**
*யாழ்ப்பாணம், மந்திகை, கல்வியங்காடு.*

*470, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (86096)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 16 - 06 - 1921
உதிர்வு 01 - 04 - 2000

**அமரர் சின்னத்தம்பி பொன்னையா**

எமது அன்புத் தெய்வமே! ஒரு வருடத்திலே இருவரும் இறைவனடி சேர்ந்து விட்டீர்களே! ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் அன்பு நினைவுகள் என்றென்றும் எம் நெஞ்சிலிருந்தும் மாறாது. உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்புப் பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*பொ.பரமசாமி,*
*புலோப்பளை,*
*பளை.* (85067)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 02 - 02 - 1949
உதிர்வு 02 - 03 - 2001

**அமரர் பஸ்ரியாம்பிள்ளை யோசப்**

சென்றாயோ எமைப்பிரிந்து நீ எங்கே?
ஏனையா எமைப்பிரிந்து சென்றுவிட்டாய்?
நாமிங்கே துணையின்றி வாடுகிறோம்!
துயில்கின்ற நேரமெல்லாம் துணையானாய்!
நீ இப்போ ஏனப்பா துயில்கின்றாய்?
எமையெல்லாம் ஒரு கணமேனும் நீ நினையாய்?
எமை மறந்து எமைவெறுத்துச் சென்றாயோ?
உன் நினைவு ஊரெல்லாம் அலைபாய
உன்நினைவால் நாம் இங்கே துவழ்கின்றோம்!
இல்வாழ்வு முடிந்தாலும் மறுவாழ்வு உண்டென்று
உன் ஆத்மா சாந்தியுற நாம்
இறைவனை வேண்டுகின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு எம் ஆறாத்துயரில் பங்கு கொண்டு எங்கள் துயர்துடைத்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் பங்குத்தந்தை உட்பட குருக்கள், கன்னியர்கள், அமலமரித்தியாகிகள் சபைக்குருக்கள் மற்றும் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும அரச அதிகாரிகள், ஊழியர்கள், அரசசார்பற்ற ஊழியர்கள் மற்றும் யாழ்.பல்கலைக்கழக முதலாம் வருட A பிரிவு மாணவர்கள், தீவகக்கல்வி வலய, கோட்டக்கல்வி அதிகாரிகள் மற்றும் இலங்கை வங்கி அதிகாரிகள், ஊழியர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

*கரம்பொன் கிழக்கு,*
*ஊர்காவற்றுறை.* (85970)


# நெதர்லாந்தில் ஜனாதிபதிக்கு எதிராகத் தாக்கலான மனு!

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அண்மையில் நெதர்லாந்து சென்றிருந்தபோது அவரைக் கைது செய்வது தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட மனுவை அந்நாட்டு உயர்நீதிமன்றம் நிராகரித்தது தெரிந்ததே. அந்த முறைப்பாடு உரியமுறையில் மேற்கொள்ளப்பட்டிருப்பின் தற்போதுள்ள உலக நிலைவரத்தின் படி நீதிமன்றத்தின் தீர்ப்பு வேறு விதமாகவும் அமைந்திருக்கக் கூடும். இது தொடர்பாக "ராவய" சிங்கள வாரஇதழில் வெளியான ஆசிரியத் தலையங்கத்தின தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அண்மையில் நெதர்லாந்து சென்ற போது நெதர்லாந்திலுள்ள புலம் பெயர்ந்த தமிழ்மக்கள் சார்பில் செயற்படும் சட்டத்தரணி ஒருவர், சித்திரவதைகள், மனித உரிமை மீறல்கள், தண்டனை வழங்கல்கள் ஆகியனவற்றிற்கு எதிராக 1994 ஜனவரி மாதத்தில் சிறிலங்கா உட்பட ஏனைய நாடுகளால் கைச்சாத்திடப்பட்ட உடன்பாடிற்கு முரண்படும் விதத்தில் சிறிலங்காவில் சம்பவங்கள் இடம்பெறுவதால் இவற்றிற்குப் பொறுப்பான அரசின் தலைவி என்ற விதத்தில் ஜனாதிபதி சந்திரிகாவை கைது செய்வதற்கான உத்தரவை நீதிமன்றத்திடமிருந்து பெறுவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் வெற்றியளிக்காமல் போயின. நெதர்லாந்திலிருந்து கிடைக்கும் தகவல்களின்படி உரிய முறையில் அந்த வழக்குத் தாக்கல் செய்யப்படாத காரணத்தாலேயே நீதிமன்றம் அந்த வழக்கை நிராகரித்துள்ளது.

இதிலிருந்து சிறிலங்காவின் அரசுத் தலைவர் அல்லது தலைவி மற்றும் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட அமைச்சரவை உறுப்பினர்கள் முக்கியமான பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். அதாவது உலகில் மாற்றங்கள் மிக விரைவாக இடம்பெறுகின்றன; மனித உரிமை மீறல்கள் மிகவும் பாரதூரமான குற்றச் செயல்கள் என்ற எண்ணம் வலுத்து வருகிறது. இவ்வாறான குற்றச் செயல்களில் ஆள்கள் காணாமல் போதல், சித்திரவதைகளுக்கு உட்படுதல் ஆகியன மாத்திரமன்றி பொதுமக்களின் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படுதல், மக்களிடமிருந்து உரித்தற்ற விதத்தில் பணம் சேகரித்தல் ஆகியன அடங்குகின்றன.

அரசியல்வாதிகளுக்கு கிடைத்துள்ள அதிகாரம் காரணமாக நாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்களைக் கண்டும் நீதிமன்றம் மௌனம் சாதிக்கிறது.

இவ்வாறான குற்றங்களுடன் தொடர்புடைய அரசியல்வாதி ஒருவர் ஐரோப்பிய நாடு ஒன்றுக்குச் செல்லும் வேளையில் யாராவது ஒருவர் குறித்த அந்த அரசியல்வாதிக்கு எதிராக அந்நாட்டு நீதிமன்றத்தில் உரிய முறையில் முறைப்பாடு செய்வாராயின அந்த அரசியல்வாதி கைது செய்யப்படவும் அவருக்கு எதிராக வழக்குத் தொடரவும் முடியும்.

*தமிழில்:- கஜனி*

பாரதூரமான குற்றச்செயல்களைப் புரிந்த ஒருவர் நாட்டைவிட்டுத் தப்பி ஓடி பிறிதொரு நாட்டில் வாழ்வதற்குரிய வாய்ப்புக்கள் இருப்பது போலவே அவ்வாறான குற்றங்களைப் புரிந்தோர் அந்த நாடுகளுக்கு விஜயங்களை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளும் இன்றைய உலக நிலையில் வரையறுக்கப்பட்டுள்ளன என்பதை நெதர்லாந்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எடுத்துக்காட்டுகிறது.

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் குற்றச்செயல்களுக்கு அரசின் தலைவர்-தலைவி பொறுப்பேற்க வேண்டும். அரசுத் தலைவர்கள் சமூகத்தின் தேவைகளுக்காக மாத்திரமன்றி அவர்களின் சொந்தத் தேவைகளுக்காகவும் அவர்களது செயற்பாடுகளில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. ☆

## மனித உரிமைகளை அசட்டை செய்யும் அரசியல்வாதிகளுக்கு ஓர் எச்சரிக்கை!

# குடாநாட்டில் முதலாவது...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆவணி மூலத்தில் நடைபெற்றதாகவும், இவருடைய பேரனார் இவருடைய உபநியாசத்தைக் கேட்டு ஆசீர்வதித்தாரென்றும், அவ்வரங்கேற றத்திற்குத் தலைமைவகித்த கோயில அறங்காவலர் பொன்னுச்சாமிச் செட்டியார் இவருடைய தொடர் பிரசங்க வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தார் என்றும் கூறப்படுகிறது. இலங்கை வானொலி இவருடைய பிரசங்கங்களுக்கு முன்னுரிமை அளித்தது. அககாலத்தில் இந்துசமயம், தமிழ் இலககியம் போன்ற பாடங்களைப் படித்தவர் தொடர்ச்சியாக இவர் பிரசங்கம் செய்யும் கோயில்களுக்கெல்லாம் சென்று சந்தேகமும் விபரீதமும் போக்க கேள்வியால் தோட்கப்பட்டுத் தேர்வுகளிலே சிறந்த சித்திகளைப் பெற்றமையும் நினைவு கூரத்தக்கதாகும்.

"கேட்டார் பிணிக்கும் தகையவாய்க கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்" என்ற குறளுக்கு ஏற்பசொல்விற்பனம் ததும்பப் புராண இதிகாசக் கதைகளைச் சொல்லவல்ல நல்வித்தையை இவர் கைவரப் பெற்றிருந்தார். அத்துடன் இவருடைய வெண்கல ஓசை போன்ற கணீர் என்ற குரல் வளம் இவருடைய புலமைக்குப் புத்தொளி சேர்ப்பதுபோல் அமைந்திருந்தது. அதில் ஊன்றித் திழைத்ததில் நானும் இவருக்கு 'எற்றே என்று இகமழிந்தேன்'

## பிரசங்கமாரி

இவருடைய சிறப்பை அறிந்து இலங்கையின் பல பாகங்களிலுள்ள சைவ, இந்துசமயத்தவர்களும் ஆலய விழாக்களின்போது இவரை அழைத்து உபநியாசங்கள் செய்வித்து மகிழ்ந்தனர். கொழும்பு ஜிந்துப்பிட்டி சிவ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தினர் இவருக்குப் பொன்னாடை போர்த்துப் பொற்கிழி வழங்கிக் கௌரவித்தனர். இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் அழைப்பை ஏற்று ஆங்காங்கே சென்று சைவமும் தமிழும் தழைக்கப் பிரசங்க மாரி பெய்து பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்த்தார். நல்லை நகர் நாவலரைக் காணாதவர்கள் இவரின் தோற்றத்தில் அவரைக் கண்டு ஆனந்தம் அடைந்தனர். அவரின் பிரசங்கத்தைக் கேட்காதவர்கள் இவரின் பிரசங்கங்களைச் செவிமடுத்து 'விரைந்து தொழில் கேட்டனர்'.

நாவலரின் வேணவாக்கள் சிலவற்றை நிறைவேற்றிய பெருமை நல்லைக் குருமணியையே சாரும். நாவலர் பெருமான் நல்லூரில் பிறந்து வளர்ந்து வண்ணார்பண்ணையை தமது சைவப்பணிகளுக்கு நிலைக்களமாகக் கொண்டார், குருமணி அவர்கள் வண்ணார் பண்ணையில் பிறந்து வளர்ந்து நல்லூரைத் தமது சமயப் பணிக்குரிய இடமாகக் கொண்டார். எனினும் அவர்கள் இருவரினது பணிகளையும் 'நீளநினைந்து நித்தலும் கைதொழக்கூடிய' இடமாக நல்லூர்ப்பதியே அமைந்துவிட்டது. நல்லைக்கந்தன் அவர்களை ஆட்கொண்ட கருணையே கருணை! என்ன மாதவம் செய்தது இத்திரு நல்லூர்!

## இறை பயணம்

குருமணி அவர்கள் நல்லைக் கந்தனின் மகோற்சவ காலங்களில் ஒவ்வொரு நாளும் தொடராகப் பிரசங்கங்கள் செய்து கந்தன் கருணைக்கு இலக்கானவரானார். கந்தன் திருவருள் பாலிக்கின்ற இடத்திலே ஆதீனம் ஒன்றை உருவாக்கும் எண்ணம் அவன் அருளாலே அவர் உள்ளத்தில் தளிர்த்து. 'ஆட்டுவித்தால் ஆரொருவர்'! திருவருளால குருவருள் கிடைக்கும் காலம் கனிந்தது - அந்தவேளை தமிழ் நாட்டில் இறைபயணம் (யாத்திரை) மேற்கொள்ளத்திருவருட்சித்தம் தூண்டியது. மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் சந்நியாசமும், ஞானதீட்சையும் பெற்றுத் தவக்கோலம் பூண்டு காவியுடுத்துச் சந்நியாசியாய், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் என்ற தீட்ஷா நாமத்துடன் வந்து ஆதீனத்தை அமைத்து அதன் குருபீடத்தில் குரு முதல்வராகக் கொலுவீற்றிருந்தார்.

அவர் நல்லை ஆதீனத்தில் பல்லோரும் போற்றிப்பணியுமாறு பக்தியையும், பண்பாட்டையும், சைவசமய விழுமியங்களையும் வளர்ப்பதில் உந்து சக்தியாகத் திகழ்ந்தார். ஆதீனம் அமைந்துள்ள இடத்தைப் புத்தூர் மழவராயவள்ளலார் அவர்கள் குருமணி அவர்களுக்கு நன்கொடையாகக் கொடுத்ததாகத் தெரியவருகிறது. தூயன துணியும்போது துணையாகத்திருவருள் சுரக்கும் என்பதற்கு இது சான்றாகும். ஆரம்பத்திலிருந்து ஒவ்வொரு ஆண்டும் 'பீடா ரோஹண விழா' சிறப்பாக நடந்து வந்தது. சிவப்பணி செய்யுமாறெல்லாம் தவப் பணியாகத்தலை மேற்கொண்டு அவமாய வல்வினைகளெல்லாம் போக்கினார்.

## மறைவு

1981ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் திருவாதிரை நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் 'பதியிற் பதிந்திருந்து மௌனப் பெருவெளியில் பரம சுகமடைய' இறைபதம் எய்தினார். குருமணியின் சமாதி நல்லை ஆதீனத்தின் மேற்குப்புறத்தில் அமைக்கப்பட்டு சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யப்பெற்று குருமூர்த்தி ஆலயமாகத் திகழ்கின்றது.

குருமணி அவர்கள் தமக்கு வாரிசாகச் சுந்தரலிங்கம் என்பவரைத் தேர்ந்தெடுத்து முன்கூட்டியே 'இளவரசுப்பட்டம் கட்டித்தம்பிரான் சுவாமிகளாக அமர்த்தியிருந்தார். நல்லைக குருமணியின் நல்லாசிகளைப் பெற்றவரும், அவருடைய குழந்தைபோல் வளர்ந்தவருமாகிய 'இளவரசு' அவர்கள் இரண்டாவது குருமகா சந்நிதானமாக அமர்ந்து ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் என்ற தீட்ஷா நாமத்துடன் ஆதீனப் பணிகளைச் சிறப்புற நடத்தி வருகின்றார்கள். கதாப்பிரசங்கக் கலை அழியாவண்ணம் குருமணியின் சீடர்கள் செயலாற்றுகின்றனர். இவர்களுள் பிரமஸ்ரீ வைதீஸ்வர தியானந்தசர்மா அவர்கள் குறிப்பிடத்தக்கவராவார். எதிர்காலத்தில் நல்லை ஆதீனம் எய்தப்போகும் சிறப்பிற்குக் கட்டியங் கூறுவது போலப் புதுப் பொலிவுடன் நிமிர்ந்து உயர்ந்து நிற்கிறது. 'என்ன புண்ணியம் செய்தனம் என்று சைவ நன்மக்கள் எல்லோரும் உவகையால் துள்ளுகின்றனர்.

"உன்நாமமே உச்சரித்திடும் அடியர் நாமமே நான் உச்சரிக்க வசமோ!"

☆


உங்களுக்குத் தேவையான புதிய பாடத்திட்டங்களுக்கு
அமைவான தரமான பாடநூல்களுக்கு நாடுங்கள்

**குளோபல் வெளியீடுகள்**

கிடைக்கும் இடம்:-

**சிவன் மாளிகை பிறைவேற் லிமிட்ரெட்**

(C/15971) **166, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

# பல்துறைசார் ஆக்கப் பணிகளில் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 9 ஆவது ஆண்டு செயலமர்வு இவ்வாரம் நடைபெறவுள்ளது. அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

'எங்கும் விஞ்ஞானம் எதிலும் விஞ்ஞானம்' என்ற பதத்துக்கு மெருகூட்டுவதுபோல விஞ்ஞான கலாசாரம் உலகில் பல நாடுகளிலும் விருத்தியடைந்து ஆட்சிபுரிந்து வருவதனைக் காணலாம். மேலைத்தேய நாடுகளில் மனித தேவை அனைத்துக்கும் விஞ்ஞானத்தின் மூலமாக விடை காணப்பட்டிருப்பதிலிருந்து விஞ்ஞானமின்றி 'மனித மேம்பாடு' இல்லை எனும் நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதனை நினைவில் கொள்ளலாம். விஞ்ஞானத்தை மனிதன் பயன்படுத்துகிறான் என்பதனை விட விஞ்ஞானம் மனிதனை ஆட்டிப் படைக்கிறது என்றால் மிகையாகாது. வளர்முக நாடுகளில் விஞ்ஞானத்தின் வளர்ச்சிக்கான நிதியை மேலைத்தேய நாடுகளிலிருந்து கையேந்திப் பெற்று வளர்க்கவேண்டிய நிர்ப்பந்தத்தினால் விஞ்ஞானத்தின் வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கே இந நாடுகள் முன்னேற்றம் காணக்கூடியதாயுள்ளன. இதற்கு எமது நாடு விதிவிலக்கானது அல்ல. எமது நாட்டின் தேசிய ரீதியிலான விஞ்ஞான வளர்சிக்கு 'இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கம்' (Sri Lanka Association for the Adrancement of Science - SLAAS) ஸ்தாபிக்கப்பட்டது போல காலத்தின் தேவை உணர்ந்து பிராந்திய ரீதியிலான 'யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்' 1991 ஆம் ஆண்டு பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் தலைமையில் அங்குரார்ப்பணம் செயயப்பட்டு அதன் முதல் தலைவராக அந்நாள் துணைவேந்தர் அமரர் பேராசிரியர் அழகையா துரைராசா அவர்கள் பணியாற்றி சிறப்பித்தார்.

### விஞ்ஞான சங்கத்திற்கு அகவை பத்து

இலங்கையில் ஒரேயொரு பிராந்திய ரீதியிலான விஞ்ஞான கலாசாரத்தை வளர்த்தெடுக்கும் நிறுவனமாக 'யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்' இருப்பதுடன் இம்மாதத்துடன் தனது பத்தாவது வருடத்தில் திடமாகக் கால்பதிக்கின்றது இதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றவர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்களாவர்.

விஞ்ஞான அறிவை வளர்தெடுக்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கத்தில் நிரந்தர (ஆயுள்கால), தற்காலிக மற்றும் பல்கலைக்கழக மாணவ உறுப்பினர்கள் இருக்கின்றனர். இச்சங்கத்தில் உறுப்பினராகும் உரிமை பட்டதாரியாகிய ஒருவருக்கோ அல்லது விஞ்ஞான அறிவு வளர்ச்சியில் கணிசமான அளவு பங்காற்றிய ஒருவருக்கு மத்திய செயற்குழுவின் சிபார்சுக் கேற்பவும் வழங்கப்படும். மேற்கூறிய தகைமைகளை பாடசாலை மாணவர்கள் கொணடிராத காரணத்தால் இவர்களுக்கென 2001 ஆம் ஆண்டில் கனிஷ்ட யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தை (Junior JSA) ஆரம்பிக்கவேண்டிய தேவையின் காரணமாக இதற்கான ஆரம்பச் செயற பாடுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

### பல்கலைக்கழகமும் விஞ்ஞான சங்கமும்

யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தில் உள்ள பலர் உறுப்பினராக இருப்பதனாலும் பல்கலைக்கழக வளங்கள் அனைத்தையும் பயன்படுத்துவதனாலும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தற்காலிகமாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினுள் இயங்கி வருகிறது. 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கை நடைபெற்ற காலகட்டத்தில் ஓர் ஆண்டு செயலமர்வு நடத்தப்படாது விடப்பட்டதால் இந்தப் பத்தாவது வருடத்தை பூர்த்தி செய்கையில் ஒன்பதாவது ஆண்டு செயலமர்வு நடைபெறுகின்றது. இச் செயலமர்வு எதிர்வரும் 4 ஆம், 5 ஆம், 6 ஆம் திகதிகளில் யாழ்.பல்கலைக் கழகத்தில் நடைபெறும். பல்கலைக் கழகத்தினுள் தற்காலிகமாக இயங்கி வந்தாலும் கூட விஞ்ஞான சங்கத்தின் செயற்பாடுகள் எமது பிராந்தியத்தின் அனைத்து இடங்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளதனையே காணலாம். மேலும் 'பல் கலைக்கழக புத்திஜீவிகளின் சொத்து' எனப் பலரும் சந்தேகிக்கும் நிலை எள்ளளவும் இல்லாதிருக்க இதில் உறுப்பினராக வுள்ள பாடசாலை கல்வியாளர்களை நிர்வாகக் குழுவில் உள் வாங்கியிருப்பதுடன் இனிவரும் காலங்களில் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து வெளியேறி தனித்துவமான பணிமனையில் இயங்குவதற்கான நாளையும் எதிர்பார்த்திருக்கின்றது.

### விஞ்ஞான சங்கத்தின் செயற்பாடுகள்

விஞ்ஞான சங்கத்தின் செயற்பாடுகளைத் துறைசார்ந்த ரீதியில் இலகுவாகச் செயற்படுத்துவதற்காகவும் அனைத்துப் பிரிவுகளையும் 'விஞ்ஞானம்' என்னும் பதம் மூலம் இணைக்கும் பாலமாகவும் செயற்படுத்தி வருகின்றமை இச்சங்கத்தின் தனித்துவமான சிறப்பியல்பாகும். அதனாலேயே யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் 4 பகுதிகளைக் கொண்ட உப செயற்குழுக்களை அமைத்து அந்தந்த விடயங்கள் சார்ந்த கல்வியறிவை அனைவரும் பயனுறும் வண்ணம் நடைமுறைப்படுத்தி வருகின்றது. தூய விஞ்ஞானம் (பகுதி A), பிரயோக விஞ்ஞானம் (பகுதி B), மருத்துவ விஞ்ஞானம் (பகுதி C) மற்றும் சமூக விஞ்ஞானம் (பகுதி D) ஆகிய நான்கு பிரிவுகளும் தனித்தனியான உப செயற்குழுக்களைக் கொண்டு தத்தமது பிரிவுகள் சார்ந்த செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்துகின்றனர். இவற்றுள் தொடர் கருத்தரங்குகள், ஆய்வுப் பட்டறைகள், விஞ்ஞானக் கல்வி மேம்பாடு சார்ந்த வெளியீடுகள், எனப் பல வழிகளில் துறைசார் நிபுணர்களின் உதவியுடன் இப்பிராந்திய மக்களுக்கு சேவையாற்றி வருகின்றது.

### விஞ்ஞானப் போட்டி

இப்பிராந்தியத்திலுள்ள பாடசாலைகளில் கல்வியிலும் மாணவர்களின் விஞ்ஞான அறிவை வளர்ப்பதற்காக கல்லூரிகளுக்கிடையிலான விஞ்ஞானப் போட்டி நிகழ்ச்சியினை வருடாவருடம் நடத்திவருகின்றது. இப்போட்டி நிகழ்வில் விஞ்ஞான பேச்சுப் போட்டி, விஞ்ஞானக் கட்டுரைப் போட்டி, விஞ்ஞான வினா விடைப் போட்டி மற்றும் விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டி என்பன நடத்தப்பட்டு அவற்றில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் அந்தந்த வருட செயலமர்வின் போது வழங்கப்படும். இவ்வருடம் இபபரிசில் வழங்கும் வைபவம் 6-4-2001 வெள்ளிக்கிழமை 12.30 மணிக்கு நடைபெறவுள்ளளது.

தமிழ் மொழி மூலம் கல்வி பயிலும் மாணவர்களின் நன்மை கருதி தமிழ்மொழியில் உள்ள பாடநூல்களின் பற்றாக்குறையை அகற்ற ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கென பாடசாலை துறைசார் ஆசிரியர்கள், பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்கள் ஆகியோரை இணைத்து பாடவிதானத்துக்கு ஏற்ப நூல்களை தமிழில் உருவாக்கும் பணி ஆரம்பித்து கணிதத்துறை மாணவருக்கான 'அட்சர கணிதம்-1' என்னும் நூல் வெளியிடப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக 'மூலக்கூற்று உயிரியல் - 1' என்ற நூலும் விரைவில் வெளிவரவுள்ளது. இந்நூல்கள் அனைத்தும் பதிப்பகத்தின் செலவுடனேயே வெளியிடப்படுவதால் அனைத்து மாணவர்களும் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு செய்யப்பட்டுள்ளது.

### கனிஷ்ட யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்

பாடசாலை மாணவர்கள், பல்கலைககழக மாணவர்களை ஒருங்கிணைப்பதன் மூலம் விஞ்ஞான அறிவை மேன்மேலும் பாலர் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை விருத்தி செய்வதற்காக கனிஷ்ட யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தை உருவாக்கும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த வகையில் முற்றுமுழுதாக மாணவர்களைக கொண்ட அமைப்பாகச் செயற்பட்டு தாய்ச் சங்கத்தின் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் ஊக்கம் கொடுப்பதாக இது அமையும். ஒவ்வொரு பாடசாலையிலும் கனிஷ்ட யாழ்பபாண விஞ்ஞான சங்கக்கிளை அமைத்து அதன ஒருங்கிணைந்த செயற்பாடுகளை கனிஷ்ட விஞ்ஞான சங்கம் மேற்கொள்ளும். இதன்மூலம் விஞ்ஞானப் போட்டி நிகழ்வில் கலந்து கொள்வதற்காக அனைத்து பாடசாலை மாணவர்களையும் ஒருங்கிணைக்கும் நிறுவனமாகவும் இது அமையும்.

### இளம் ஆய்வாளர் விருது

மாணவர்களிடையே விஞ்ஞான அறிவை வளர்த்தெடுக்கும் முயற்சியின் ஒரு பாகமே 'இளம் ஆய்வாளர் விருது' ஆகும். சிறந்த, தரமான மாணவர்களின் ஆய்வினை பரிசீலித்து இந்த விருது இனிவரும் ஒவ்வொரு வருடமும் வழங்கப்படவுள்ளது. யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் (பகுதிA) தூய விஞ்ஞானப் பிரிவினர் மேற்கொண்ட இம்முயற்சியில் பல மாணவர்கள் ஈடுபாடு காட்டுவது அனைவரையும் ஊக்கப்படுத்துவதாக அமைகிறது.

**குணசிங்கம் மிகுந்தன்**
**(உதவிப் பொதுச் செயலாளர், யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்)**

இந்நிகழ்வில் பல கருத்தரங்குகளும் ஆய்வுக் கட்டுரைகளும், பகுதித தலைவர்களினதும் கருத்தரங்குகளும் நடைபெறவுள்ளன. மாணவர்கள், ஆசிரியர்கள், ஆர்வமுடைய பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயனடையும் வண்ணம் அன்பான வேண்டுகோள் விடுக்கின்றோம். இம்மாதம் 4 ஆம், 5 ஆம் 6 ஆம் திகதிகளில் இச்செயலமர்வு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும். வாரீர்! பயன் பெறுவீர்!

---

# தமிழ்ப் பிரதேசத்திலிருந்து ஓர் ஆங்கிலச் சஞ்சிகை

ஆங்கிலத்தில் கல்வி என ஒரு புதிய கோஷம் தற்போது முனைப்புப் பெற்றுள்ளது. உலகம் பூகோளமயமாக்கலில் சுருங்கி கிராமமாக உருப்பெறத் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி பெரும் பங்காற்றி வருகிறது. இந்தத் தகவல் நுட்ப வளர்ச்சிக்கு மனிதனின் தொடர்பாடல் தேவை முக்கிய காரணமாகிறது. மொழி மனிதனின் தொடர் பாடலில் முக்கியபங்கை வகிக்கிறது. அந்த வகையில் உலகப் பொதுமொழியான ஆங்கிலம் உலகளாவிய பொதுத் தொடர்பு மொழியாக மற்றைய உலக மொழிகளை விடவும் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. அதன் காரணமாக ஆங்கிலத்தில் கல்வியும் செல்வாக்குப் பெறுகிறது.

காலனித்துவகாலத்தில் ஆங்கிலக் கல்வியினால் பெரிதும் முன்னேறிய ஈழத்தமிழர்கள் ஆங்கிலத்தில் தம் உணர்வுகளைப் பதித்தமை

## சஞ்சிகை:- 'மூன்றாவது கண்' 'THIRD EYE'

## நூல் விமர்சனம்

குறைவானதாகவே காணப்படுகிறது. அழகு சுப்பிரமணியம், தம்பிமுத்து, தம்பிராஜ, இராமநாதன் ராஜ புறொக்ரர், சி.வி.வேலுப்பிள்ளை என ஒரு சிலரே அடையாளம் காணப்படுகின்றனர். இன்று உலகப் புகழ்பெற்ற நாவல் எழுத்தாளர்களாக ஏ.சிவானந்தனும், சியாம் செல்லத்துரையும் (தாய்வழி சிங்களம்) விளங்குகின்றனர். சமகாலத்தில் ஏ.ஜே.கனகரத்தினா, செல்வா.கனகநாயகம், சுரேஷ் கனகராஜா ஹென்றி விக்ரர், சோ.பத்மநாதன், கே.எஸ்.சிவகுமாரன், ஐ.சாந்தன், சரவணபவஐயர், பரந்தாமன் ஆகியோர் கவிதை, கட்டுரை, சிறுகதை, மொழிபெயர்ப்பு என ஆக்க இலக்கியத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ் உணர்வுகளை ஆங்கிலத்தில் படைப்பாக்கும் முயற்சிகளை வரவேற்க ஒரு களம் 'சற்றடே றிவியூ' பத்திரிகைக்குப் பின் இல்லாதிருந்த நிலையை மாற்றி, பல கவிதை, கட்டுரை, சிறுகதை, விமர்சனம் போன்ற வடிவங்களில் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் ஒரு ஆங்கிலச் சஞ்சிகையாக 'மூன்றாவது கண்' (Third Eye) விளங்குகிறது. 1993 இலிருந்து வெளிவரும் இச்சஞ்சிகை ஆறு இதழ்களை இதுவரை வெளியிட்டுள்ளது. ஆரம்பத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பின்னணியிலிருந்து வெளியான இச்சஞ்சிகை தற்போது மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைக்கழகப் பின்னணியிலிருந்து வெளிவருகிறது.

கலாநிதி சுரேஷ் கனகராஜா, ஏ.ஜே.கனகரட்னா, ஆர்.முருகையன் ஆகியோரை ஆலோசனைக் குழுவிலும், சி.ஜெயசங்கர், வைதேகி ராஜபபிள்ளை ஆகியோரை ஆசிரியர்களாகவும் கொண்டு வெளிவரத்தொடங்கிய 'மூன்றாவது கண்' தற்போது கிழக்குப் பல்கலைக்கழக ஆங்கில மொழிப் போதனைப் பிரிவைச் சேர்ந்த ரி.கிருபாகரன், எஸ்.எம்.பிலிக்ஸ், எல்.ஏ.லியோன் ஆகியோரும் ஆலோசனைக்குழுவில் இணைந்து செயற்படுவது பரந்த ஒரு தளத்தில் 'மூன்றாவது கண்' இயங்குவதைப் பறை சாற்றுகிறது.

பேராசிரியர் சிவத்தம்பி, சுரேஸ் கனகராஜ, சாந்தன், ஏ.ஜே.கனகரட்னா, வளன், கே.எஸ்.சிவகுமாரன், எல்.ஏ.லியோன், பொன்.கணேஸ் மீரா ஸ்ரீனிவாசன், பிரமின், ஹென்றி விக்ரா போன்றோரின் விமர்சனங்கள், சிறுகதைகள், கவிதைகள் இவ்விதழின் ஆறாவது வெளியீட்டில் இடம்பெற்றுள்ளன. சோலைக்கிளி, கலா, கிருஷாந்தி ரட்ணராஜ, பாண்டியூரான் ஆகியோரின் கவிதைகளும், கௌரி பாலன், சட்டநாதன், நீர்வை பொன்னையன், என்.கே.ரகுநாதன் ஆகியோரின் கதைகளும் சனாதனின் கட்டுரையும் தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கு மொழிமாற்றப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளன. மொழிபெயர்ப்புக்களை ஏ.ஜே.கனகரட்னா, ரி.கிருபாகரன், கே.ராஜ், பொன்.கணேஷ், எஸ்.எம்.பீலிக்ஸ், ஜீவா ஜீவரட்ணம், கே.எஸ்.சிவகுமாரன் ஆகியோர் செய்துளளனர்.

**கந்தையா ஸ்ரீகணேசன்**

'மூன்றாவது கண்ணின்' சிறப்பு என்னவென்றால் அது தமிழ் உணர்வுகளை, தமிழன் வாழ்வை, தமிழர் நெருக்கடிகளை சித்திரிப்பது தான். ஏ.ஜே.கனகரட்னாவின் சிறப்பிதழாக வந்திருக்கும் ஆறாவது இதழ் முன் அட்டையில் கவிஞர் பிரேமிளின் உருவப்படத்தைத் தாங்கி வந்துள்ளமை சிறப்பானது.

---

# இரட்டைக் குழந்தை பிரசவித்த பெற்றோருக்குக் கொடுப்பனவு

## உடுவிலிலும் இருவருக்குக் கிடைக்கும்

இரட்டைக் குழந்தைகளைப் பிரசவித்த பெற்றோர்களுக்கு ஊக்குவிப்புப் பணம் கொடுக்கப்பட்டு வருகின்றது.

சிறுவர் பாதுகாப்பு நன்னடைத்தைப் பிரிவின் மூலம் இக்கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளைப் பெறுகின்ற வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பெற்றோர்களே விசேட கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளத் தகுதி உடையவர்கள் ஆவர். கடந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இக்காலத்தின் பின்னர் இரட்டைக் குழந்தைகளையோ அன்றி அதற்கு மேற்பட்ட குழந்தைகளைப் பெற்ற பெற்றோர்கள் தமது பகுதி கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு இதற்கான கொடுப்பனவைப் பெறமுடியும்.

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இரண்டு தாய்மாருக்கு இக்கொடுப்பனவைப் பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அப்பகுதி கிராம அலுவலர் மற்றும் சமூக சேவை உத்தியோகத்தர் மேற்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இரட்டைக் குழந்தைகளைப் பிரசவித்தவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாவும், மூன்று குழந்தைகளைப் பிரசவித்தவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. (க-86)

# மோட்டார் சைக்கிள் பதிவு 9 ஆம் திகதி முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.1

மோட்டார் சைக்கிள்களைப் பதிவு செய்து இலக்கத்தகடுகள் வழங்கும் பணி யாழ்.செயலக மோட்டார் பதிவு திணைக்களத்தில் மீண்டும் இம்மாதம் 9ம் திகதி தொடக்கம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

இரண்டு சில்லு உழவு இயந்திரங்களின் 'செசி' இலக்கமும், இயந்திர இலக்கமும் மோட்டார் பதிவு திணைக்கள அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்படும் எனவும் -

அதனைக் கொழும்பில் உள்ள மோட்டார் பதிவு திணைக்களத் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி இலக்கத்தகட்டைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் மோட்டார் பதிவுத் திணைக்கள அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு சில்லு உழவு இயந்திரங்களை நிறுத்து அனுப்பும் நடைமுறை இல்லை என்றும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார். (க-6)

## நிவாரண விநியோகம்

யாழ்ப்பாணம்,ஏப்.1

புத்தாண்டை ஒட்டி மார்ச்,ஏப்ரல் ஆகிய இரு மாதங்களுக்கான நிவாரணம் நாளை திங்கட்கிழமை முதல் ப.நோ.கூ. சங்கக் கிளைகள் மூலம் வழங்கப்படவிருக்கின்றது.

யாழ். செயலக அதிகாரி ஒருவர் இததகவலை வெளியிட்டார்.(உ-6)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## டிஸ் அன்ரனா விற்பனைக்கு

**EUROSTAR** மொடல், நம்பர் **LT 950 GOLD** டிஸ் அன்ரனா (8 அடி) விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 637, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (85612)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியையும் (யாழ்.பஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள) மின்சார நிலைய வீதியையும் இணைக்கும் வீதியில் யாழ்ப்பாண பிரதம தபாறகந்தோர் முன்பாக கடைகள் கட்டுவதற்கு வசதியான காணி விற்பனைக்கு உண்டு. மேலதிக விவரங்களுக்கு: குமார், யாழ்ப்பாணம். என்பவரிடம் தொடர்பு கொள்ளவும். **T.P 2917** (86082)

## விற்பனைக்கு

22G தரமான சில்வர் தகடுகள் 8'x4', 8'x3' (எட்டு அடி நீளம், அகலம் நாலு அடி, மூன்று அடி) எம்மிடம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இல. 150, 152, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ரெலிபோன் இல. 2052. (85776)

வெற்றுச் சோடாப் போத்தல்கள், பலகைப் பெட்டிகள், வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (86074)

## தட்டெழுத்து நூல்கள்

தமிழ், ஆங்கில தட்டெழுத்து நூல்கள் விற்பனையாகின்றன. கிடைக்கும் இடங்கள்: பிரபல புத்தகசாலைகள் மற்றும் **S.T.C.A,** 221, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (86080)

## ENGLISH CLASSES

தரம்1 - **O/L, A/L, G.A.Q, B.A.** வரை பாடத்திட்டத்துக்கமைய இலகு முறையில் அனுபவம்மிக்க ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றது. (**O/L** - 2001 துரித மீட்டல் பயிற்சி, **A/L** 2002 - 2003 வகுப்புகளில் மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி) ஆரம்பம்:- 07-04-2001 **M.P.**ஷண், பலாலி வீதி, தேவாலய முன் ஒழுங்கை, உரும்பிராய். (86126)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/-), தொடர்பு:- பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 3081. *(C/15377)*

## O/L MATHS

ஆண்டு 6 இல் இருந்து **O/L** வரை கணித பாடத்தில் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் இது வரை சித்தியடையாதவர்களுக்கும் 36 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் **Distinction** பெறுபேறடையக் கற்பிக்கப்படும். க.ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. (86077)

## தவறிவிட்டது

கட்டைப்புளியடி, அல்வாய் மேற்கு, அல்வாய் என்னும் முகவரியைச் சேர்ந்த வடிவேலு கந்தசாமி என்பவருடைய தே.அ.அ. (இல.630753023V), விசேட அ.அ.(இல.0908012216), இராணுவ பாஸ்(இல.155624) என்பன வீரமாகாளியம்மன் கோயில் சுற்றாடலில் கடந்த 29-03-2001 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சாந்தி பனைமரக்காலை, வீரமாகாளியமமன் கோயிலடி, யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (86086)

இணுவில் கிழக்கு, இணுவிலைச் சேர்ந்த சொர்ணலிங்கம் குணவர்சன் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல.0906001842), பாடசாலை அடையாள அட்டை என்பன கடந்த 23.03.2001 இல் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் யாழ்.இந்துக்கல்லூரியில் ஒப்படைத்துதவவும். (86121)

உரும்பிராய் வடக்கு, உரும்பிராயைச் சேர்ந்த சோதிலிங்கம் கவிதா என்பவருடைய தே.அ.அட்டை (இல.785743130V), விசேட அ.அ. (இல.0903003040), தொழில் அ.அட்டை (குவைத்) என்பன 19.03.2001 அன்று கோப்பாய் பிரதேச செயலகத்துக்கும் உரும்பிராய் இந்துக் கல்லூரிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் உரும்பிராய் சந்தி, கோப்பாய் வீதியிலுள்ள ராஜா சலவைத் தொழிற்சாலையில் ஒப்படைத்துதவவும். (86125)

## வீடு தேவை

அரச உத்தியோகம் பார்க்கும் இருவர் கொண்ட இளம் குடும்பத்துக்கு நல்லூர், திருநெல்வேலிச் சுற்றாடலில் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: விள.இல.1249, மே/பா உதயன். (85990)

## நாய் விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய **DOBERMANN** ஆண் நாய் விற்பனைக்குண்டு. தொடர்பு:-அ.குமாரவேலு (ஆசிரியர்) 132/1, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (பூங்கா அண்மையில்) (86119)

## புறோயிலர் விற்பனைக்கு

சுத்தம் செய்யப்பட்ட **BAIRAHA FARM** புறோயிலர் இறைச்சிக்கோழி, **CHICKEN SAUSAGES, CHICKEN MEAT BALLS** எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- 145, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். **T.P.** 2868. (86118)

## ஏகலைந் கல்வி நிறுவனம்

**192, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

O/L DAY CLASS

எமது வழமையான ஆசிரியர் குழு.

*ஆரம்பம்:* 02.04.2001 திங்கள் காலை 8.00 மணி

(86127) - நிர்வாகி.

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

பாதிக்கோழி உட்பட இறைச்சிக்கோழி தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் லேன், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச சந்தையடி, நல்லூர். (86073)

இறைச்சிக்கோழி கல்பேட்ஸ் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (86117)

## விதை நெல்லுக்கு பதிவு செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.1

விதை நெல் தேவைப்படும் தென மராட்சிப் பகுதி விவசாயிகளை புலோலி மற்றும் நல்லூர் கமநல கேந்திர நிலையங்களில் இயங்கும் தென்மராட்சி கமநல கேந்திர நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பெரும்பாக உத்தியோகத்தர் கேட்டுள்ளார்.

விதை நெல் தேவையான விவசாயிகள் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் ஒரு புசலுக்கு 200 ரூபா வீதம் செலுத்தி பதிவு செய்து கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (க-5)

## தென்மராட்சி மாணவருக்கு!

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ.உயர்தர வகுப்புகளில் கற்க விரும்பும் மாணவர்கள் அண்மையில் வெளியான க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறு பேற்றுப்பத்திரம், பாடசாலை அனுமதி விண்ணப்பப் படிவம் ஆகியவற்றுடன் எதிர்வரும் 4ஆம் திகதி புதன்கிழமை நெல்லியடி நியூ சயன்ஸ் சென்ரரில் இயங்கும் மேற்படி வித்தியாலயத்துக்கு வருகை தருமாறு அதிபர் அறிவித்துள்ளார். (க-117)

## சுன்னாகத்தில் இன்று வரவேற்பு

யாழ்ப்பாணம்,ஏப்.1

யாழ்.மாநகரசபை மேயர் என் ரவிராஜ் மற்றும் பிரதிமேஜர் செல்லன் கந்தையா ஆகியோருக்கு இன்று பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகத்தில் வரவேற்பு விழா நடத்தப்படவுள்ளது.

முன்னைய சங்கானை பட்டினசபையின் முன்னாள் தலைவர் க.திருச்சிற்றம்பலம் தலைமையில் சுன்னாகம் பெரியமதவடி மான்ஸ் த.க.பாடசாலையில் இந்த விழா நடைபெறவுள்ளது. (க-5)

## காயமுற்றார்

கடந்த ஊர்காவற்றுறைப் பகுதியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் கத்தி வெட்டுக்கு இலக்கான குடும்பஸ்தர் ஒருவர் யாழ்.போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை நெருஞ்சிமுனையைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ஐஸ்ரின்(வயது 29) என்ற குடும்பஸ்தரே இடது கையில் படுகாயமடைந்தவர் ஆவார். (உ-6-9)

## இன்று பல்கலையில் பரிசளிப்பு வைபவம்

யாழ்ப்பாணம்,ஏப்.1

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள், வணிக பீட மாணவர் ஒன்றியத்தினரின் "மாகோஸ்" வார இறுதி நிகழ்வும், பரிசளிப்பு வைபவமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும், கௌரவ விருந்தினராக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதி மா.நடராஜ சுந்தரமும் -

சிறப்பு விருந்தினர்களாக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜாவும் முகாமைத்துவ கற்கைகள் - தலைவர் திருமதி நி.தர்மசீலனும் கலந்து கொள்வர். முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியத்தினரால் நடத்தப்பட்ட அனைத்து நிகழ்வுகளிலும் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

இறுதி கலை நிகழ்வுகளாக போட்டிகளின்போது முதலிடம் பெற்ற சிறுகதை, கவிதையுடன் நாடகமும் மேடையேற்றப்படும். (க-6)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 25 - 07 - 1925

மறைவு 02 - 03 - 2001

அமரர்

**அம்பலவாணர் செல்வநாயகம்**

**B.Sc.** (HONS)


உங்கள் நினைவு அலைகள்
ஓயாது நாளும் பொழுதும்
எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும்!

இன்று (01.04.2001) ஞாயிற்றுக்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

*பிரிவால் துயருறும் :*

*தில்லகட்டி, சுன்னாகம்.* **அ.சிவபாதசுந்தரமும்** (சகோதரன்) **மக்களும், மருமக்களும்.** (86122)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் 31.03.2001 சனிக்கிழமை அன்று நீர்கொழும்பில் நடத்தப்பட்ட வைபவத்தில் சம்மேளன விருதைப் பெற்றுக்கொண்ட யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் உப தலைவரும் யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் உப தலைவருமாகிய

**திரு.S.கிளிபேட் அன்ரனிப்பிள்ளை**

அவர்களுக்கு எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**- யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம்.** (86129)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்



திருமதி

**முருகேசு நாகரெத்தினம்**

அன்னை மடியில் 01-04-1918

ஆண்டவன் அடியில் 02-03-2001

கடந்த 02.03.2001 அன்று இறைவனடி சேர்ந்த எம் அன்னையின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், உதவிகள் புரிந்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும், மலர்வளையம் வைத்தவர்களுக்கும், 'வெஸ்கோ' யாழ்., மந்திகை, கல்வியங்காடு பொறுப்பாளர்கள், ஊழியர்களுக்கும் யாழ். வைத்தியசாலை பங்காளர், வைத்தியர், ஊழியர் அனைவருக்கும், கொக்குவில், பெருமாள் கோயிலடி, மன்னார் வாழ் அன்புசால் உள்ளங்களுக்கும், வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிகர் கழகத்தின் உறுப்பினர்களுக்கும், 'ஜீவசக்தி' உறுப்பினர்களுக்கும், சர்வதேச லயன்ஸ் கழகம், 306B யின் மாவட்ட இணைப்பாளர், பிராந்தியத் தலைவர், வலயத் தலைவர்கள், மாவட்டத் தலைவர்கள், முன்னாள் மாவட்டத் தலைவர்கள், சகோதர அரிமாக்கழகங்களின் உறுப்பினர்கள், கொக்குவில் லயன்ஸ் கழக உறுப்பினர்கள், யாழ். மருத்துவபீட மாணவர்கள் மற்றும் தொலைபேசி, தந்தி மூலம் துக்கம் பகிர்ந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (01-04-2001) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியை நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு:- தனிப்பட்ட அழைப்புக் கிடைக்காதவர்கள் தயவு செய்து இதையே அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

**லயன் Dr.க.மு.கதிர்காமநாதன்** (முன்னாள் சுகாதார வைத்திய அதிகாரி)
**லயன் க.மு.பத்மநாதன்** (வெஸ்கோ)
**திரு.நா.தனபாலசிங்கம்** (ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)
**திரு.சே.முகுந்தன்** (முகாமையாளர், வெஸ்கோ)

*இல.81, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோயிலடி) யாழ்ப்பாணம்.* **T.P - 3188** (86128)

### ஐக்கியத்துக்கான சர்வமதக் கூட்டமைப்பு

# தாமதமின்றிப் பேச்சுக்களை ஆரம்பிக்கக் கோரிக்கை

## இரு தரப்பையும் சந்திக்கவும் ஏற்பாடு

கொழும்பு, ஏப்ரல் 1

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணச் சமாதானப் பேச்சுக்களைக் கால தாமதமின்றி உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்று தேசிய ஐக்கியத்துக்கான சர்வமதக் கூட்டமைப்பு கோரியுள்ளது.

சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தை சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் நேரில் சந்தித்து வலியுறுத்தவும் கூட்டமைப்பு நடவடிக்கை எடுத்து வருவதாக அதன் செயலாளர் வட்டினாபஹ சோமானந்த தேரர் தெரிவித்தார்.

முதலில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்துப் பேச இருப்பதாகவும் —

ஜனாதிபதியுடன் பேசிய பின்னர் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்குச் சென்று புலிகளின் பிரதிநிதிகளையும் நேரில் சந்தித்துப் பேச உள்ளதாகவும்—அவர் மேலும் சொன்னார் (ம)

# வடபகுதி அரச நிர்வாக சேவை வெற்றிடங்களை நிரப்ப ஏற்பாடு

## விசேட போட்டிப் பரீட்சைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஏப்ரல் 1

வடபகுதியில் அரசாங்க நிர்வாக சேவையில் வகுப்பு ii தரம் ii இல் நிலவும் பதவி வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு விசேட பகிரங்க, மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளை நடத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு வடபகுதியில் நடத்திய கணக்கெடுப்பு ஒன்றின் போது மேற்படி 140 பதவி வெற்றிடங்கள் இருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்துள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சிபார்சின் பேரில் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், நிர்வாக, மறுசீரமைப்பு அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன வடபகுதியில் இப் போட்டிப் பரீட்சையை நடத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தலை அடுத்த வாரம் விடுக்கவுள்ளார்.

இதேவேளை அரசாங்க நிர்வாக சேவைக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்கான பகிரங்கப் போட்டிப் பரீட்சையின் எழுத்து மூலப் பரீட்சை யாழ். நகரிலும், கொழும்பிலும் நடத்தப்படுவதால் விண்ணப்பிக்கும் இறுதித் திகதியை நீடிக்குமாறும் விண்ணப்பதாரர்களின் வயதெல்லையை அதிகரிக்குமாறும் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா அமைச்சர் ரிச்சர்ட் பத்திரனவின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தார். அதையடுத்து விண்ணப்ப இறுதித் திகதி ஏப்ரல் 16 ஆம் திகதிக்கும் வயதெல்லை 28 இலிருந்து 30 ஆகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனைக் கவனத்தில் கொண்டு யாழ். குடாவிலுள்ளவர்கள் மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறும் அமைச்சர் டக்ளஸ் யாழ். வாசிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போது அரச நிர்வாக சேவையில் வகுப்பு ii தரம் ii பதவி வெற்றிடங்கள் அதிகளவில் இருப்பதால் வடக்கிற்கான புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளில் தாமதம் ஏற்படுவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ரிச்சர்ட் பத்திரனவின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். (க)

# மீனவரை கடற் பாம்பு தீண்டியது

தென்மராட்சி, ஏப். 1

பருத்தித்துறைகடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த குடும்பஸ்தர் கடல் பாம்பினால் கடியுண்ட சம்பவம் வியாழக்கிழமை காலை இடம்பெற்றது.

கடற் பாம்பினால் கடியுண்ட பருத்தித்துறை மூன்றாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த தேவசகாயம் தேவதிரவியம் (வயது 35) என்பவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(க-117)

# சந்நிதியில் இன்று ஆத்மீக உரை

யாழ்ப்பாணம், ஏப். 1

தொண்டமானாறு ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்த சங்காபிஷேக தினமான இன்று ஆலயத்தில் விசேட சமய ஆத்மீக உரை இடம்பெறவுள்ளது.

வி. தெய்வேந்திர ஐயர் தலைமையில் பகல் உற்சவத்துக்குப் பின்னர் நடைபெற உள்ள நிகழ்வில் "நாலாயிரம் கண்படைத்திலனே" எனும் தலைப்பில் சுவாமி சித்ரூபானந்தா உரை நிகழ்த்துவார்.

(க-10,

# போலிப் பத்திரம் சமர்ப்பித்து மணல் ஏற்றியோர் சிக்கினர்

## சோதனையிட்ட கிராம அலுவலர் அதிர்ச்சி

தென்மராட்சி, ஏப். 1

வரணி நாவற்காடு பகுதியிலிருந்து மணல் ஏற்றி வந்த டிராக்டரை வழிமறித்து சோதனை செய்த குடமியன் பகுதி கிராம அலுவலருக்கு அதிர்ச்சிகாத்திருந்தது.

மணல் ஏற்றி வந்தோர் சமர்ப்பித்த அனுமதிப்பத்திரத்தில் தானும் தென்மராட்சி பிரதேச செயலரும் ஒப்பமிட்டிருந்ததைக் கவனித்தே அவர் அதிர்ச்சியடைந்தார்.

போலி ஆவணத்தைச் சமர்ப்பித்து மணல் ஏற்றிய இந்த விடயத்தை உடனடியாக கிராம அலுவலர் எஸ் நாகதேவன் பிரதேச செயலரின் கவனத்திற்குக் கொண்டு வந்ததுடன் டிராக்டரையும் அதில் பயணம் செய்தவர்களையும் முள்ளி சோதனைச் சாவடியில் உள்ள படையினர் மூலம் நெல்லியடிப் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார்.

(க-117)

# இரண்டாம் மொழி கற்பிக்க ஆசிரியர் நியமிக்கப்படுவர்

அச்சுவேலி, ஏப். 1

புதிய கல்விச் சீர் திருத்தத்தின் கீழ் பாடசாலைகளில் இரண்டாம் மொழியைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இரண்டாம் மொழியைக் கற்பிப்பதற்கு விரும்பும் 50 வயதுக்குக் குறைவான ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்களைப் பெற்று அவர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்பட உள்ளது.

தமிழ் மாணவர்களுக்கு சிங்களமும், சிங்கள மாணவர்களுக்கு தமிழும் இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதற்கு புதிய கல்விச் சீர் திருத்தத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் மொழி கற்பிப்பதற்கு விரும்பும் ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்களைப் பெற்று அனுப்புமாறு கல்வி அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கை மூலம் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இரண்டாம் மொழி கற்பிப்பதற்கு பாடசாலைகளில் உள்ள வகுப்புக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஆரம்பப் பிரிவு, இடை நிலைப் பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளுக்கும் பிரிவு வாரியாக ஒன்று தொடக்கம் மூன்று ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-11)

# ஊர்காவற்றுறைப் பகுதியில் தொழிற் பயிற்சி நிலையம்

காரைநகர், ஏப் 1

ஊர்காவற்றுறைப் பகுதியில் உள்ளவேலைவாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி அளிப்பதற்காக தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று ஊர்காவற்றுறை கரம்பன் பகுதியில் நிறுவப்பட உள்ளது.

இந்தப் பயிற்சி நிலையத்தில் விவசாய உபகரணங்கள் திருத்தம் செய்தல், கண்ணாடி இழைப்படகு தயாரித்தல். வீட்டு மின் இணைப்பும், நிர்மாணமும், மேசன் பயிற்சியும், பனை வளத்திலிருந்து உணவு மற்றும் பொருள்கள் தயாரித்தல் ஆகிய 5 பயிற்சி நெறிகள் நடத்தப்பட உள்ளன. இவை ஒவ்வொன்றிற்கும் 20 பேர் வீதம் 100 பேர் முதற்கட்டமாகச் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர்.

ஆறு மாதங்கள் கொண்ட இந்தப்பயிற்சிநெறியில்பயிற்சி பெறுவோருக்கு மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா ஊக்குவிப்புப் படியாக வழங்கப்பட உள்ளது. இந்தப் பயிற்சி நெறிகள் மே மாத முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட உள்ளன

இந்தப் பயிற்சி நிலையம் அமைக்கப்பட உள்ள கட்டடம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் ந. மதனராஜா தலைமையில் சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட உள்ளது. (ஐ-73)

### பழைய பாவ வாழ்வை மறந்து விட்டு

# இன்று பிறந்த மனிதரைப் போல் புதிய வாழ்வு தொடங்குவோம்

இன்று பாசத்தின் எல்லை பரிதாபத்தின் எல்லையைச் சந்திக்கின்றது. புனித கங்கை சாக்கடையைச் சந்திக்கின்றது. கன்னிமரி ஈன்ற கற்பின் கொழுந்து இயேசு கற்பை இழந்து கல்லெறிக்காகக் காத்துக் கொண்டு இருக்கும் விபசாரியைச் சந்திக்கின்றார்.

தீர்ப்பு திருத்தப்படுகிறது. ஆம், ஏனெனில் ஏற்கனவே அந்த விபசாரப் பெண்ணுக்குச் சட்டத்தின் காவலர்கள் தீர்ப்பு வழங்கி விட்டனர். சிறுவர் முதல் பெரியவர் வரை அவளைக் கல்லால் எறிந்து கொல்லத் துடித்துக் கொண்டிருந்தனர். கீழ் நீதிமன்றத்திற் தீர்ப்பு வெளியாகிவிட்டது. ஆனால் உயர் நீதிமன்றம் என்ன சொல்கிறது என்று கேட்கின்றனர்.

## தவக்காலச் சிந்தனை

உயர் நீதிமன்றம் கீழ் நீதிமன்றத்தின் தீர்ப்புச் செல்லாது என்று கூறாமல், தீர்ப்பை நிறைவேற்றத் தகுதி உள்ளவன் நிறைவேற்றட்டும் என்று கூறுகிறது. நூதனமான தீர்ப்பு!

தீர்ப்பை நிறைவேற்றத் துடித்துக்கொண்டிருந்த அத்தனை பேருடைய மனச்சாட்சியிலும் சரமாரியான கல் விழுகிறது. அதன் விளைவு .....? அத்தனை ''நீதிமான்களும்'' கைகளில் இருந்த கற்களை நழுவவிட்டு விடுகின்றனர்.

**33 ஆம் நாள் ஞாயிறு**

தீர்ப்பு திருத்தப்படுகின்றது. குற்றவாளி விடுதலை பெறுகிறான். குற்றம் சாட்டியவர்கள் மனச்சாட்சியின் தண்டனைக்குள்ளாகுகின்றனர்.

விபசாரப் பெண் விடுதலை பெறுகிறாள். இயேசு அவளுக்குச் சட்டம் விதித்த மரண தண்டனையை வழங்கவில்லை மாறாக அம் மரணதண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றி விடுகிறார். ஆம். ''இனிமேல் பாவம் செய்யாதே'' என்று யேசு கூறியது ஆயுள் தண்டனை தானே. அதாவது அவள் தன் ஆயுள் முழுவதும் கடைப்பிடிக்க வேண்டிய கட்டளை.

மனமாற்றம் அடைந்தவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கத்தை யேசு தெளிவாகக் கூறிவிட்டார். அவர்கள் இனிப் பாவம் செய்யக் கூடாது. நாம் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறோம். திரும்பவும் நாம் பாவத்திற்கு அடிமைகள் ஆகலாகாது.

நமது கடந்த காலம் எவ்வளவுதான் மோசமாக இருந்தாலும் ஒருமுறை நாம் மனந்திரும்பிப் பாவமன்னிப்புப் பெற்ற பின் மறுபடியும் மறுபடியும் நமது பழைய பாவ வாழ்வை எண்ணி எண்ணி மனப்பயம், மனவிரக்தி அடையக் கூடாது.

புனித சின்னப்பர் கூறுவது போல கடந்ததை மறந்து விட்டு முன்னிற்பதைக் கண் முன் கொண்டு வந்து

அருட்சகோ.
எஸ். ஏ. றொஷான்

இலக்கை நோக்கி ஓடுவோம்.

கடந்து போனவற்றைச் சிந்திக்க வேண்டாம். முற்கால நிகழ்ச்சிகளைப் பற்றி எண்ணவேண்டாம் இதோ நாம் புதியன செய்கிறோம். இறந்த காலத்தை இறைவனின் இரக்கத்திற்குக் கையளித்துவிட்டு இன்று பிறந்த மனிதர்களைப் போல் புதிய வாழ்வு தொடங்குவோம்.

★

## சமய சந்நிதிகளில்

அல்வாய் வடக்கு வியாபாரி மூலை பத்திரகாளி சமேத ஆதி வீரபத்திர சுவாமி கோயில் வருடாந்த உற்சவம் கடந்த வியாழக்கிழமைகொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் இடம் பெறும்

எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ரதோற்சவமும் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

(க-173)

★ ★ ★

காரைநகர், ஏப். 1

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெற உள்ளது.

புத்தாண்டுத்தினமான எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் முற்பகல் 11.00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெற உள்ளன.

(ஐ-73)

# நீடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 1

நல்லூர் பிரதேச சபையினால் சனசமூக நிலையங்களுக்கு இடையே நடத்தப்படவுள்ள, விளையாட்டுப் போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

( க - 86 )

# தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள்

தென்மராட்சி, ஏப்.1

ஜி.சி.ஈ. சாதாரண பரீட்சைக்குத் தோற்றிய தென்மராட்சிப் பிரதேச தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு வந்துள்ளன.

பரீட்சார்த்திகள் தத்தமது பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அஞ்சல் அதிபர்கள் அறிவித்துள்ளனர்.

## சச்சின் 10,000 ஓட்ட சாதனை

இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர், உலகில் ஒரு நாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகளில் மொத்தம் 10 ஆயிரம் ஓட்டங்கள் பெற்ற முதல் வீரர் என்ற சாதனையைப் புரிந்துள்ளார்.

நேற்று இந்தூரில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் இந்தச் சாதனையை அவர் படைத்தார்.

இந்த ஆட்டத்தில் இந்தியா 118 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. (ஓ)

## மேற்குக் கரை மக்களை பாதுகாக்கும் ஐ.நாவின் தீர்மானத்துக்கு அமெரிக்கா முட்டுக்கட்டை

நியூயோர்க், ஏப்ரல் 1

மேற்குக் கரை மற்றும் காஸா பகுதிகளில் உள்ள பொதுமக்களைப் பாதுகாக்க ஐ நா. மேற்கொண்ட முயற்சிக்கு அமெரிக்கா முட்டுக்கட்டை போட்டது.

பலஸ்தீனர்கள் பெரும்பான்மையாக வாழும் மேற்குக்கரை, காஸ பகுதிகளில் சர்வதேச அவதானிகள் படை ஒன்றை அமைப்பதென வலியுறுத்தி கடந்த செவ்வாய்க்கிழமை ஐ நா. தீர்மானம் கொண்டுவந்தது. இந்தத் தீர்மானத்தை அமெரிக்கா 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தி ரத்துச் செய்துவிட்டது.

இந்த விடயம் பாதுகாப்புச் சபையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது, பங்களாதேஷ், கொலம்பியா, ஜமெய்க்கா, மாலி, மொரீஷியஸ், சிங்கப்பூர், துனிசியா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் ஆதரித்தன. பிரிட்டன், பிரான்ஸ், அயர்லாந்து, நோர்வே ஆகியவை வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

இந்தத் தீர்மானம் சமத்துவமற்றதாகவும், நடைமுறைச் சாத்தியமற்றதாகவும் கூறிய அமெரிக்கா அதனை எதிர்த்து வாக்களித்தது.

ஒரு தீர்மானம் நிறைவேற ஐ நா. பாதுகாப்புச் சபையில் 15 உறுப்பு நாடுகளில், 9 நாடுகள் ஆதரவாக வாக்களிக்க வேண்டும் அதேசமயம் நிரந்தர உறுப்பு நாடுகளான பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகியவற்றில் ஒரு நாடு கூட தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்கக்கூடாது.

இத்தகைய நிலையில், அமெரிக்கா தீர்மானத்தை எதிர்த்து 'வீட்டோ' அதிகாரத்தை பயன்படுத்தியதால் மேற்குக் கரைக்கு ஐ நா. சர்வதேச அவதானிகள் படையை அனுப்பும் தீர்மானம் ரத்துச்செய்யப்பட்டது.

ஐ. நா. கண்காணிப்புப் படையை, இஸ்ரேல், தனது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுமதிக்காது விட்டாலும், மேற்குக் கரைப் பகுதிக்குள் கண்காணிப்புப் படையை ஐ நா. அனுப்பவேண்டும் என்று பலஸ்தீனர்கள் நீண்ட காலமாக பல தடவை வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

(ஓ-5)

## இந்தியாவில் பங்கு மோசடி: தரகர் கைது!

மும்பை, ஏப்ரல் 1

இந்தியாவில் பாரிய பங்குச் சந்தை மோசடியில் ஈடுபட்டதாக பங்குத்தரகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சேட்டன் பரேக் என்ற இந்தப் பங்குத் தரகர், மீது, 'பாங்க் ஓவ் இந்தியா' வங்கியில் 130கோடி ரூபா மோசடி செய்ததாகவும் — அந்த நிதியைக்கொண்டு, பங்கு வர்த்தகத்தில் நிலையற்ற தன்மையை ஏற்படுத்தியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

(ஓ)

## இஸ்ரேலிய ஹெலித் தாக்குதலில் அரபாத்தின் வீடு கடும் சேதம்

காஸா, ஏப்ரல் 1

காஸாவில் உள்ள பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தின் வீடு, இஸ்ரேலிய ஹெலிகளின் தாக்குதலால் சேதமடைந்தது.

கடந்த புதன்கிழமை காஸாவில் இஸ்ரேலிய ஹெலிகள் கடும் ஏவுகணைத்தாக்குதல்களை நடத்தின. இத்தாக்குதலில் அரபாத்தின் வீடு சேதமடைந்திருப்பதை பலஸ்தீன தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

சேதமடைந்த வீட்டுத்தரை முழுவதும், ஜன்னல்கண்ணாடிகளின் சிதறல்களால் நிறைந்திருந்ததும், சுவர்களில் வெடிப்புகள் ஏற்பட்டு ஆங்காங்கே உடைந்திருந்ததும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.

தாக்குதல் நடந்த சமயத்தில் ஜோர்டானில் நடைபெற்ற அரபு லீக்கின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள அரபாத் சென்றிருந்ததாக பலஸ்தீனத் தொலைக்காட்சி தெரிவித்தது.

சமாதானப் பேச்சுக்களைச் சீர்குலைத்து, பயங்கரவாதம் மூலம் பலஸ்தீனர்களைப் பணிய வைக்கும் இஸ்ரேலின் எண்ணத்தையே, இத்தாக்குதல்கள் பிரதிபலிப்பதாகப் பலஸ்தீனத் தரப்புப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

(ஓ-5)

## மேற்குக்கரை மோதலில் 6 பேர் பலி!

ஜெருசலேம், ஏப். 1

மேற்குக் கரை மற்றும் காஸா நிலப்பகுதியில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது, இஸ்ரேலியப் படைகளுடன் ஏற்பட்ட மோதலில் 6 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்; 18 பேர் காயமடைந்தனர்.

இதன் பின்னர் பலஸ்தீன அமைச்சர்கள் சிலர், மேற்குக் கரையிலிருந்து காஸாவுக்கு செல்ல முற்பட்ட போது, இஸ்ரேலியப்படைகளால் தடுக்கப்பட்டனர்.

(ஓ)

## எல்லையில் வேலி அமைப்பதை இந்தியா உடன் நிறுத்த வேண்டும்

### பாகிஸ்தான் எச்சரிக்கை

இஸ்லாமாபாத், ஏப்ரல் 1

இந்திய — பாகிஸ்தான் கட்டுப்பாட்டு எல்லையின் காஷ்மீர்ப் பகுதியில் இந்தியா மேற்கொண்டுவரும் முட்கம்பி வேலி அமைக்கும் பணியை அது உடனடியாக நிறுத்த வேண்டும் என்று பாகிஸ்தான் எச்சரிக்கை செய்துள்ளது.

வேலி அமைப்பதன் மூலம் இந்தியா கட்டுப்பாட்டு எல்லைகளை மாற்றி அமைக்க முனைகின்றது. இதனைத் தடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

இதுபோன்ற நடவடிக்கைகளாலேயே இரு நாடுகளுக்கும் இடையில் முன்னர் பெரும் யுத்தங்கள் மூண்டன என்பதை இந்தியா மறந்து விடக் கூடாது என்றும் அது கூறியுள்ளது.

இதேவேளை —

கட்டுப்பாட்டு எல்லையில் இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்துக்கும் பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்துக்கும் இடையில் இந்தியா ஏற்கனவே முட்கம்பி வேலியை அமைத்துள்ளது.

பாகிஸ்தானில் இருந்துதீவிரவாதிகள் எல்லையைக் கடந்து இந்தியாவுக்குள் நுழைவதைத் தடுக்கும் நோக்கத்துடனேயே இந்த வேலி அமைக்கும் பணி தொடங்கப்பட்டதாக இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(ம)

## ரயிலில் 'ரிக்கெட்' எடுக்காமல் பயணம் செய்த நீதிபதி!

### திடீர்ச் சோதனையில் சிக்கினார்

புதுடில்லி, ஏப்ரல் 1

ரயிலில் 'ரிக்கெட்' இன்றிப் பயணம் செய்த சிரேஷ்ட நீதிபதி ஒருவர் பணியில் இருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவின் கிழக்கு மாநிலம் ஒன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாவட்ட நீதிபதியான கனேஷ்தத் என்பவரே பதவியில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளார்

ரயில் 'ரிக்கெட்' பரிசோதகர்களின் திடீர்ச் சோதனை நடவடிக்கையின் போது இந்த நீதிபதியும் வகையாகச் சிக்கிக் கொண்டார்.

அதனை அடுத்து இந்திய ரயில்வேதுறை இவர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொண்டது. இதனால் அவர் பணியில் இருந்து இடை நிறுத்தப்பட்டார்.

இந்திய ரயில்வே துறைக்கு 'ரிக்கெட்' இன்றிப் பயணம் செய்பவர்களால் ஆண்டு தோறும் கோடிக் கணக்கான ரூபா வருமான இழப்பு ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ம)

## இந்துமதச் சின்னங்களை அவமதித்த 'காதலர் தினம்' கதாநாயகி மீது மும்பைப் பொலீஸார் வழக்கு!

மும்பை, ஏப்ரல் 1

இந்துமதச் சின்னங்களை அவமதிக்கும் விதத்தில் உடையணிந்த குற்றச்சாட்டின் பேரில் நடிகை சோனாலிபிந்ரே மீது வழக்குத் தொடரப்படவுள்ளது.

'காதலர் தினம்' திரைப்படத்தில் கதா நாயகியாக நடித்தவர் சோனாலிபிந்ரே இவரது அரை நிர்வாணப் புகைப்படத்தை 'ஷோடைம்' சினிமா இதழ் 1998 மார்ச் மாதம் அட்டைப்படமாக வெளியிட்டது.

அந்தப் படத்தில் சோனாலி இந்து மதச் சின்னங்கள் சிலவற்றை உடலில் அணிந்திருந்தார்.

இந்தப் படம் வெளிவந்ததையடுத்து மும்பையில் ஆளும் கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் இந்துத்துவ அமைப்புகளான சிவசேனை மற்றும் பாரதீய ஜனதா ஆகிய கட்சிகள் சோனாலி மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரின.

மும்பைப் பொலீஸார் இது தொடர்பாக சோனாலியை விசாரணை நடத்தி வந்தனர்.

மூன்று வருடங்களின் பின்னர் கடந்த 28 ஆம் திகதி மத உணர்வுகளைப் புண்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் மும்பைப் பொலீஸார் சோனாலியை கைது செய்தனர். பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

சோனாலி மீது சில நாள்களில் வழக்குத் தொடரப்பட உள்ளதாக பொலீஸார் கூறியுள்ளனர்.

(ஓ 5)

## காங்கிரசுடன் திரிணாமுல் தேர்தல்கூட்டு

கொல்கத்தா. ஏப்ரல் 1

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் நடைபெற உள்ள சட்ட சபைத் தேர்தலில் திரிணாமுல் காங்கிரசுடன் இந்திய காங்கிரஸ் கட்சி கூட்டணி அமைத்துள்ளது.

இரு கட்சிகளிடையேயான தொகுதிப் பங்கீடுகள்தொடர்பான பேச்சுக்கள் நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

(ஓ)

## யூகோ.வில் மிலோசெவிக் கைது?

பெல்கிரேட், ஏப். 1

யூகோஸ்லாவியாவின் முன்னாள் அதிபர்சொலபொடான் மிலோசெவிக் கைது, செய்யப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

முன்னதாக அதிகாரிகள் அவரைக் கைது செய்யச் சென்ற போது ஏற்பட்ட மோதலில் ஒரு காவலரும் செய்தியாளர் ஒருவரும் காயமடைந்துள்ளனர். (ஓ)

## மரண அறிவித்தல்

### கனகரட்ணம் தங்கம்மா

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் தாவளை, வட்டு-கிழக்கு, வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட கனகரட்ணம் தங்கம்மா 30 - 03 - 2001 வெள்ளிக்கிழமை மன்னாரில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கார்த்திகேசு கனகரட்ணத்தின் (துர்க்கா ஸ்ரோஸ்) அன்பு மனைவியும் சசிதரன் (உதவி அரசாங்க அதிபர் பணிமனை, மன்னார்) சசிகலா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சசிகலா (ஆசிரியை, மன்னார்), தில்லைவாசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் தனுசன், சிரோமி (மன்னார்), துர்க்கலோஜினி, நிரோஜன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (02-04-2001) திங்கட்கிழமை மன்னாரில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப. சிறிதரன்.
(துர்க்கா ஸ்ரோஸ்)

மாவடிச் சந்தி,
வட்டுக்கோட்டை.

(சி/16007)


## பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழி காட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என் உள்ளத்தைப் பக்குவப் படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே என் வாழ்வின் எச்சத்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் அனைத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மில் இருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேன் என உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகிறேன்.

ஓ! பரிசுத்த ஆவியே! உமக்கு நன்றி!

— ஓர் அடியான்

(86140)

## தந்தை செல்வா முன்வைத்த

# சமஷ்டிக் கோரிக்கையை ஏற்றிருந்தால் நாடு பேரழிவுகளைச் சந்தித்திருக்காது

## 103 ஆவது பிறந்த தின நிகழ்வில் ஆனந்தசங்கரி உரை

யாழ்ப்பாணம்,ஏப்.1

தந்தை செல்வா முன்வைத்த சமஷ்டிக் கோரிக்கையை அன்றே ஏற்றிருந்தால் நாட்டில் இன்று இத்தகைய பேரழிவுகள் ஏற்பட்டிருக்காது - இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

தந்தை செல்வாவின் 103 ஆவது பிறந்த தினத்தையொட்டி யாழ்.நகரிலுள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நினைவுக்கூட்டத்துக்கு முன்னதாக செல்வா நினைவுத் தூபி உள்ளடக்கிய தந்தை செல்வா சதுக்கத்தை மாநகர முதல்வர் என்.ரவிராஜ் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து தந்தை செல்வாவின் சிலைக்கு அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், மாநகர சபை உறுப்பினர்கள் உட்படப் பலர் மலர் மாலை அணிவித்து தமது அஞ்சலியைச் செலுத்தினார்கள்.

பின்னர் யாழ்.மாநகர முதல்வர் தலைமையில் நினைவுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி மேலும் கூறியதாவது:-

அன்று தந்தையைத் துரோகி என்று கூறிய சிங்களத் தலைவர்கள் இன்று செல்வா காட்டிய பாதையில் சென்றிருந்தால் நாட்டை அழிவுப் பாதைக்குச் செல்லவிடாது தடுத்திருக்க முடியும் என்று கூறுகின்றார்கள்.

தமிழ் மக்களால் மட்டுமல்ல சிங்கள மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தந்தை செல்வா இந்தநாட்டின் சொத்து.

தமிழ் மக்களின் நலன் கருதி கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் ஒரே தலைமையின் கீழ் போட்டியிட்டிருந்தால் ஒன்பது இடங்களையும் கைப்பற்றியிருக்க முடியும். ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒரே தலைமையின் கீழ் நாடாளுமன்றம் சென்றிருந்தால் அரசாங்கத்தை எங்கள் காலடியில் விழச் செய்திருக்கலாம்.

தந்தை செல்வா யார்? எப்படி வாழ்ந்தார்? என்ன செய்தார்? என்பதை இந்த நினைவுச் சதுக்கம் மூலம் எதிர்காலச் சந்ததி அறிந்து கொள்ள முடியும்.

1972 ஆம் ஆண்டு தமிழர்கள் ஆபத்தான கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை உணர்ந்து கொண்ட தந்தை செல்வா தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்க அயராது உழைத்தார்.

அப்போது தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் வீடு தேடிச் சென்று கூட்டணியை உருவாக்குவதற்கான பேச்சுக்களை நடத்தினார்.

பண்ணாகத்தில் 1976 ஆம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டிலே தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர்களாக தந்தை செல்வா, ஜீ.ஜீ.பொன்னம்பலம், தொண்டமான் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

ஜீ.ஜீ.பொன்னம்பலம் இறக்கும் வரை தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர்களில் ஒருவராக இருந்தார். இன்று தமிழ்க்காங்கிரஸும் இல்லை. தமிழரசுக் கட்சியும் இல்லை. இந்தக் கட்சிகளின் பெயர்களில் எவராவது இயங்கினால் அது அமரர்களான எங்கள் தலைவர்களுக்கு நாம் செய்யும் பச்சைத் துரோகமாகுமென்று அவர் கூறினார்.

### சுபத்திரன் உரை

ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) பிரமுகர் த.சுபத்திரன் உரையாற்றும் போது கூறியதாவது:-

தந்தை செல்வா தனியொரு கட்சியின் தலைவரல்ல, அவர் தமிழர் தரப்புக் கட்சிகள் அனைத்தினதும் தலைவராவார்.

யாழ்.நகரில் தந்தை செல்வா சதுக்கம் அமைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை யாழ்.மாநகர சபைக் கூட்டத்தில் கொண்டு வந்தவர் புளொட் அமைப்பைச் சேர்ந்த கிருபைராசா அவரது கனவு நனவாகி விட்டது.

மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டபோது அதற்கு எதிராகக்குரல் கொடுத்தவர் தந்தை செல்வா. ஜனநாயகப் பண்புகள் கொண்ட ஓர் ஒப்புயர்வற்ற தலைவர் அவர்.

தமிழின விடுதலைக்காக பலர் பங்களிப்புச் செய்துள்ளார்கள். அவர்களது பங்களிப்பை நாம் மறக்கக் கூடாது.எனவே எமது விடுதலை வரலாற்றில் பங்களிப்புச் செய்த அனைவரையும் நாம் நினைவு கூர வேண்டும்.

தந்தை செல்வாவுக்குப் பின்னர் அண்ணன் அமிர்தலிங்கம் தலைமைப் பொறுப்பை ஏற்று தமிழினத்துக்கு வழிகாட்டியாக இருந்தார். அவர் படுகொலை செய்யப்பட்டார். அதனால் அவரது நினைவுக் கூட்டங்கள் நடத்தப்படுவதில்லை.

மாற்றுக் கருத்துக்களைக் கொண்டவர்களை துரோகிகள் எனக் கூறி அழிக்கப்பட்டதினால் தமிழர் தலைமைக்கு இன்று வெற்றிடம் ஏற்பட்டுள்ளது - என்றார்.

### தவநாதன் பேச்சு

புளொட் அமைப்பின் பிரதிநிதி மு.தவநாதன் உரையாற்றும் போது கூறியதாவது:-

எத்தனை போராட்டங்கள் நடத்தப்பட்ட போதும் இன்று தந்தை செல்வாவின் வழியிலான அரசியல் தீர்வே தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்த முடியும் என்று எல்லோரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

தந்தை செல்வாவை அவரது பிறந்த, இறந்த தினங்களில் மட்டுமல்ல எப்பொழுதும் நாம் நினைவு கூர வேண்டும் என்று கூறினார்.

நினைவுக் கூட்டத்துக்கு முன்னதாக நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், யாழ்.ஆயர் இல்லத்தைச் சேர்ந்த வண.பிதா போல் ஆகியோர் ஆசியுரை வழங்கினார்கள்.

வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி ஸ்ரீபாஸ்கரன், பிரதி மேயர் செல்லன் கந்தையன், தந்தை செல்வா அறங்காவல் குழுவைச் சேர்ந்த எஸ்.குலநாயகம் யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை ஆகியோரும் உரையாற்றினார்கள். (க-5-ரி)

## செஞ்சிலுவை சர்வதேசக் குழு அழைப்பு

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு பின்வருவோரை உடனடியாகத் தமது அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுள்ளது.

குமாரசிங்கம் ஞானப்பிரகாசம் ,குமாரசிங்கம் - ஸ்ரெலா(இருவரும்) கண்ணபுரம் கொட்டடி.யாழ்ப்பாணம்

சசிதரன் கௌரி **105/3,** கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

நமசிவாயம் ராஜரட்ணம், 'டிரெக்டர் கராஜ்' நுணாவில் மேற்கு

சின்னசாமி தர்மலிங்கம், இல 229, பாலர் வளவு, அரியாலை.

சிவகுரு முத்துலிங்கம், இல.117 ஏ.வி.தெரு, அரியாலை.

தம்பு முருகானந்தம்(வாசன்), மறவன்புலவு வடக்கு. (க-ரி)

## மிதி வெடியில் சிக்கிய மாடு

சுன்னாகம் தெற்குப் பகுதியில் உள்ள இராணுவக் காவலரனுக்குள் சென்ற பசுமாடு ஒன்று மிதி வெடியில் சிக்கி இரு கால்களையும் இழந்தது.

கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் இடம் பெற்ற இந்த சம்பவத்தில் இணுவில் கிழக்கைச் சேர்ந்த கு.பரமலிங்கம் என்பவருடைய பசுமாடு ஒன்றே மிதிவெடியில் சிக்கியது. (க-ரி)

மீண்டும் மாணவர்களே!

ஆசிரியர் கற்பிக்கும் சகல தனியார் கல்வி நிலையங்களிலும்

இந்து நாகரிகம் வழமைபோல் ஆரம்பமாகிவிட்டன.

T.ஸ்ரீஸ்

குறிப்பு: 2003 A/L அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளமையால் பதிவுகளை முன் கூட்டியே மேற்கொள்ளவும்.

★ 2000 DAY/ 2001 பரீட்சை மீட்டல் நடைபெறுகின்றன.

(86141)

## நன்றி நவில்கின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரீகத்துறை இறுதிவருட மாணவர்களாகிய எங்களின் கல்விச் சுற்றுலாவுக்கு அனுமதி வழங்கி வழிநடத்திய துணைவேந்தர், கலைப்பீடாதிபதி உள்ளிட்ட யாழ்.பல்கலைக்கழக சமூகத்துக்கு எமது மேலான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சிறப்பாக எமது துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள் எமது சுற்றுலாவுக்கான திட்டமிடலை நேர்த்தியாக வரையறுத்து வழிகாட்டினார். இந்துநாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்கள் தற்போதைய போக்குவரத்து நெருக்கடிகளின் மத்தியிலும் தனது தனிப்பட்ட இடர்பாடுகளைப் பொருட்படுத்தாது எம்மை வழிநடத்திச் செல்ல மனமுவந்து முன்வந்தார். தென்பகுதிப் பிரயாணத்தில் உள்ள பாதுகாப்பு இடர்பாடுகளை மிகுந்த மனத் தெளிவுடன் லாவகமாக எதிர்கொண்டு எம்மை உடன் அழைத்துச் சென்றமைக்கு கோடி நன்றிகள் உரித்தாகுக. சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.ப.கணேசலிங்கம் அவர்கள் எமது கப்பற்போக்குவரத்து அனுமதிகளுக்காக எம்முடன் உடன் நின்று பலவகையில் உதவினார். மேலும் இப்பயணத்துக்கான அறிவுரைகளை வழங்கிய எமது துறையின் விரிவுரையாளர்களான திருமதி சுகந்தினி சிறிமுரளீதரன், செல்வி விக்கினேசுவரி சிவசம்பு அவர்களுக்கும் எமது நன்றிகள்.

மேலும் ஆவணங்களை ஒழுங்குபடுத்தி பிரதிகள் எடுத்து பலவகைகளிலும் நெறிப்படுத்திய துணைவேந்தருடைய காரியதரிசி அவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

இந்துநாகரிகச் சிறப்புக்கலை
இறுதிவருட மாணவர்கள்.

(86142)

## தவறிவிட்டது

**இராமையா இலட்சுமி** என்பவரது விசேட அடையாள அட்டை இல. 0902015053 இரண்டாவது பங்குனித் திங்கள் தினமான 2001. 03. 26 அன்று திருநெல்வேலி அரசடி அருள்மிகு சிவகாமசுந்தரி அம்மன் ஆலயத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து மே/பா. செ.சண் முகலிங்கம், இளைப்பாறிய தபாலதிபர், "வைரவர் - கடாட்சம்", கரியப்புலம் அருள்மிகு ஞான வைரவர் கோயிலடி, பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். என்ற முகவரியில் அல்லது திருநெல்வேலிச்சந்தி, இல. 6, நவீனசந்தை, கனகா பத்திரிகை விற்பனையகத்தில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

செ.சண்முகலிங்கம்.

(86135)

## மின் இணைப்பு பயிற்சி வகுப்பு நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.1

ஸ்ரீலங்கா தொழில் பயிற்சி அதிகார சபையினால் நடத்தப்படும் மின் இணைப்பு பயிற்சி வகுப்புகள் நாளை திங்கட்கிழமை அராலி வடக்கு கிராமிய தொழில் பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளன.

ஆறுமாதகால இந்த இலவசப் பயிற்சி நெறியைக் கற்க விரும்பும் மாணவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரணதரம் வரை படித்திருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் இணைந்து பயிற்சிபெற விரும்பும் மாணவர்கள் தமது பெயர் விவரங்களை உடனடியாக அராலி வடக்கில் உள்ள கிராமிய தொழில் பயிற்சி நிலையத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு போதனாசிரியர் அறிவித்துள்ளார்.

(க-6)

## நீர் விநியோகம் தடைப்பட்டது

யாழ்ப்பாணம்,ஏப்.1

யாழ்.ஸ்ரான்லி வீதியில் நீர் விநியோகக் குழாயில் ஏற்பட்ட வெடிப்பை அடுத்து திருத்த வேலைகள் நடைபெற்று வருவதால் நீர் விநியோகம் மறு அறிவித்தல் வரை தடைப்பட்டிருக்கும் என்று யாழ். மாநகரசபை நீர் வேலைப் பொறியியலாளர் கே.ராமச்சந்திரன் அறிவித்துள்ளார்.

கொட்டடி, நாவாந்துறை உள்ளிட்ட யாழ்.நகரின் மேற்குப் பகுதிகளுக்கே நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது என்றும் -

ஓரிரு நாள்களில் திருத்த வேலைகள் முடிவுற்றதும் வழமை போல் நீர் விநியோகம் இடம்பெறும் என்றும்:- அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்வநாயகி திருநாவுக்கரசு

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காடு விளையாட்டு அரங்க வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருநாவுக்கரசு செல்வநாயகி நேற்று(31.03.2001) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொ.திருநாவுக்கரசு (முன்னாள் மகேஸ்வரன் அச்சக உரிமையாளர்), அவர்களின் அன்பு மனைவியும், நாகரத்தினம்(உரிமையாளர், சாந்தி அச்சகம், நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற நாகேஸ்வரி, மகேஸ்வரன்(சுதா அச்சகம், கல்வியங்காடு), இசைஞானதேவி(கொழும்பு), கதிர்காமநாதன்(பிரான்ஸ்), விக்கினேஸ்வரி, விக்கினேஸ்வரன்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், தனலட்சுமி, காலஞ்சென்ற விஜயசிங்கம், இராஜஇராஜேஸ்வரி, காலஞ்சென்ற நாகரெத்தினம், சரோஜினிதேவி(பிரான்ஸ்), ஈஸ்வரலிங்கம் (சாயிபாபா களஞ்சியம், நல்லூர்), மதனாம்பிகை(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், திருமதி இரவீந்திராதேவி வேலாயுதம்(ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி), திருமதி சந்திராதேவி நந்தகோபால்(மில்க்வைற்), திருமதி சாந்தாதேவி தயாபரன்(உரிமையாளர், தயா அச்சகம்), திருமதி கங்காதேவி சிவன்றாஜ்(கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்), தயாபரன், தயானந்தன்(உரிமையாளர் கலா சோடா), திருமதி விஜயராணி தியாகலிங்கம்(பிரான்ஸ்), திருமதி விஜயதேவி புவனேந்திரன்(ரவி மோட்டோர்ஸ்), விஜயகுமாரி - ஜோதி மார்க்கண்டன், திருமதி விஜயகௌரி சுரேஸ்குமார், திருமதி விஜயகலா ஆனந்தநடேசன்(ரேஸ்ரி இன்டஸ்ரீஸ்), தயாபாலன்(ஆசிரியர், யாழ்.மத்திய கல்லூரி), வேல்சந்திரன் (சுவிஸ்), சுதாகரன், சந்திரிகா, பிரதீபன், விஜயசாயி, திருமதி சத்தியபாமா செல்வரஞ்சன், சத்தியமூர்த்தி, திருமதி ஜெயந்தி விஜயன்(சுவிஸ்), ஜெகன், ஜெய்ந்தன்(U.K), சதீஸ்குமார், விஜிதா, விஜயன்(பிரான்ஸ்), காயத்திரி, தேவமனோகரி, பிரியா, செந்தூரன், சோபிகா, பிரசாந்தன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் கல்வியங்காடு விளையாட்டு அரங்க வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று(01.04.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் திருநெல்வேலி செம்பாட்டு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
*விளையாட்டரங்க வீதி,*
*கல்வியங்காடு.*
**தி.நாகரத்தினம்** (மகன்)
(உரிமையாளர், சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்)
**சி.ஈஸ்வரலிங்கம்** (மருமகன்)
(உரிமையாளர், சாயிபாபா களஞ்சியம்.)

(86137)

## திருமதி மார்க்கண்டு பிரமராம்பாள்

காரைநகரைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி கற்குழியை வசிப்பிடமாகவும் தற்காலிகமாக கந்தர்மடத்தில் வசித்தவருமாகிய திருமதி மார்க்கண்டு பிரமராம்பாள் நேற்று (31-03-2001) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சி.மார்க்கண்டு(ஹரன் ஜுவல்லர்ஸ்) அவர்களின் அன்புமனைவியும், வைகுந்தன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி, 2001 கணிதப்பிரிவு), உமாபாலன்(சாவகச்சேரி இந்துக் கல்லூரி, 2002 கணிதப் பிரிவு) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:-
*தற்காலிக முகவரி:-*
*NO-209, பலாலி வீதி,*
*கந்தர்மடம்.*
சி.மார்க்கண்டு(கணவர்)
(உரிமையாளர், ஹரன் ஜுவல்லர்ஸ், கன்னாதிட்டி)

(86143)

### ஏப்ரல் முட்டாள் தினம் இன்று

இன்று ஏப்ரல் முட்டாள்தினம். உங்கள் நண்பர்கள், அன்பர்கள், உங்களுக்கு நெருக்கமானவர்கள் உங்களை ஏமாற்றி முட்டாள் களாக்க முயல்வார்கள்.

எச்சரிக்கையாக இருங்கள்!

### ஒளிபரப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.1

அண்மையில் நடைபெற்று முடிந்த வடக்கின் மாபெரும் கிரிக்கெட் போர் தொடர்பான ஒளிப்பதிவு இன்று காலை 10.00 மணிமுதல் பலாலி சேவையில் ஒளிபரப்பாக உள்ளது.

(ம)

# ரஷ்யாவிடமிருந்து நவீன டாங்கிகளை கொள்வனவு செய்ய அரசு முயற்சி

கொழும்பு,ஏப்.1

ரஷ்ய ஆயுத விற்பனை நிறு வனங்களிடமிருந்து நவீனரக துருப் புக் காவி வாகனங்களையும் டாங் கிகளையும் கொள்வனவு செய்ய இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

அதி நவீனரக ஐரி.பி. என்ற டாங்கிகளை இலங்கைக்கு விற்பனை செய்வது தொடர்பான பேச்சுக்களை நடத்துவதற்காக ரஷ்யாவில் இருந்து உயர் அதிகாரிகள் குழுவொன்று கொழும்புக்கு வந்துள்ளது.

இந்த டாங்கி ஒன்றின் பெறு மதி பத்துலட்சம் அமெரிக்க டொலர் என்றும் -

பத்துப் படையினரைக் காவிச் செல்லக்கூடிய இந்த டாங்கிகளில் நவீனரக ஆயுதங்களும் பொருத்தப் பட்டிருக்கின்றன என்றும் -

தரையிலும் நீரிலும் செல்லக் கூடிய முறையில் இவை வடிவமைக் கப்பட்டிருப்பதாகவும் - தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த ரக டாங்கிகளை கொள்வ னவு செய்வது தொடர்பான ஒப்பந் தம் ஒன்றிலும் இலங்கை அரசு ஏற்கனவே கைச்சாத்திட்டிருப்பதா கவும் கொழும்புச் செய்திகள் தெரி விக்கின்றன.

(ம- 6)

## வல்லுறவுச் சம்பவத்தை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத் தப்பட உள்ளது.

மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு யோசப் தலைமையில் மன்னார் செபஸ்ரியன் தேவாலயத் திற்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட் டுள்ளது. ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து உண்ணாவிரதப் போராட்டமும் இடம் பெறும்.

இதேவேளை -

இந்தச் சம்பவத்துடன் தொடர்பு டையவர்கள் இடம்மாற்றம் செய்யப் பட்டுள்ளதாகவும் -

அவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் -

மன்னார் மாவட்டப் பொலீஸ் பொறுப்பதிகாரி தன்னிடம் தெரிவித் ததாக ஆயர் கூறினார்.

எனவே ஆர்ப்பாட்டம் எதுவும் செய்ய வேண்டாம் என்று அவர் தன்னிடம் கேட்டதாகவும் அவர் சொன்னார்.

"ஆர்ப்பாட்டம் நடத்துவதற்குப் பொலீஸார் அனுமதி மறுத்தால் அதனையும் மீறி குறித்த தினத்தில் ஆர்ப்பாட்டத்தை நடத்துவோம்"- என்று மன்னார் ஆயர் மேலும் தெரி வித்தார்.

(ம-6)

### தி.மு.க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில், ம.தி.மு.கவும் வெளி யேறியிருப்பது அந்தக் கூட்டணிக் குப் பெரும் பின்னடைவை ஏற்படுத் தியிருப்பதாக நோக்கர்கள் கருது கின்றனர்.

மாறாக எதிரணியில் - அ.தி. மு.க தலைமையிலான கூட்டணி யில் - மூப்பனாரின் த.மா.கா, அகில இந்தியக் காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி போன்றவை ஒன்று சேர்ந்திருப்பது அக்கட்சிக்கு வலு வூட்டியிருப்பதாகவும் அவர்கள் குறிப் பிடுகின்றனர்.

தொகுதிப் பங்கீடு தொடர்பாக கலைஞர் கருணாநிதிக்கும் கோபா லசாமிக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்கள் இரு தலைவர்களினதும் விடாப்பிடியான நிலைப்பாட்டினால் தோல்வியில் முடிவடைந்ததாக அறி விக்கப்பட்டது.

(உ)

### மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி நான்கு கோரிக்கை களையும் முன்வைத்தும், தமக்கு நீதி வேண்டியும் நாளை திங்கட்கிழமை முதல் யாழ்.மாநகர சபை பண்டா ரக்குளம் அலுவலகத்துக்கு முன் சுழற்சிமுறை உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை தாங்கள் ஆரம் பிக்கப்போவதாகவும் அவர்கள் அறி வித்துள்ளனர்.

இதேவேளை - பதவி நீக்கம் செய்யப்பட்ட குடும்ப நல உதவியா ளர்கள் நாளைக் காலை ஊர்வலம் ஒன்றையும் நடத்த உள்ளனர்.

நாச்சிமார்கோயிலடியில் இருந்து ஆரம்பமாகும் இந்த ஊர்வலம் யாழ். நகர வீதிகள் ஊடாகச் சென்று யாழ்.செயலகம், செஞ்சிலுவைச் சர் வதேசக் குழு அலுவலகம் என்ப வற்றின் ஊடாக யாழ்.மாநகர சபை யைச் வந்தடையும். ஊர்வலத்தின் இறுதியில் உண்ணாவிரதப் போராட் டம் ஆரம்பித்து வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. தமது கோரிக் கைகள் நிறைவேறும்வரை இந்தப் போராட்டம் தொடரும் என்றும் அவர் கள் தெரிவித்தனர்.

(ம)

### பாதீனியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தண்டம் விதிக்கப்படலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆபத்தான பாதீனியம் களையை அழிக்கக் கோரியும், அதை அழிக் கத் தவறுவது தண்டனைக்குரிய குற்றம் என்று தெரிவித்தும் அறி வித்தல் ஒன்றை அரசாங்கம் வெளி யிட்டிருக்கின்றது. (உ)

### சுயநிர்ணய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ பாடசாலைகள், வணக்க ஸ்த லங்கள் போன்றவற்றின் வளவுக்குள் ளும் அருகிலும் உள்ள இராணுவ முகாம்கள், சோதனைச்சாவடிகள் போன்றவற்றை உடனடியாக அகற்றி, ஆரோக்கியமான உள, மன நிலை யில் மாணவர்கள் கல்வி கற்கவும், ஆசிரியர்கள் கற்பிக்கவும், மக்கள் சுதந்திரமாக வழிபாடுகளை மேற் கொள்ளவும் ஆவன செய்யுமாறு அர சாங்கத்தைக் கோருவது.

★ கற்றல் - கற்பித்தல் தொடர் பான பொருள்கள், உபகரணங்கள், கருவிகள், கணனிகள், அத்தியாவ சிய மருந்துப் பொருள்கள், மருத் துவ உபகரணங்கள், கட்டடப் பொருள்கள், துவிச்சக்கர வண்டிகள், அவற்றுக்கான உதிரிப்பாகங்கள், மண் ணெண்ணெய் உட்பட எரிபொருள் கள் ஆகியவற்றை இராணுவக் கட்டுப் பாடற்ற பகுதிகளுக்கு எடுத்துச் செல்ல விதிக்கப்பட்டுள்ள தடைகள், கட்டுப்பாடுகளை நீக்கும் படி வற்பு றுத்துதல்.

★ விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்புகளின் பட்டி யலில் சேர்த்துக்கொள்வதென எடுத்த முடிவை மீள்பரிசீலனை செய்து, அப் பட்டியலில் இருந்து விடுதலைப் புலி கள் அமைப்பின் பெயரை நீக்கும் படி இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளைக் கோருவதுடன் அந்நாடுகளில் உள்ள சகோதர ஆசி ரிய தொழிற் சங்கங்களை இது விடயத்தில் தத்தமது நாட்டு அரசு களுக்கு அழுத்தம் கொடுக்கும் படி வேண்டுவது.

★ மன்னாரில் இரு இளம் பெண் கள் படையினரால் பாலியல் வல் லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதைக் கண்டிப்பதுடன் இத்தகைய மனித அநாகரிக - கொடூர - செயல்கள் தொடர்வதைத் தடுப்பதற்குரிய நட வடிக்கை எடுக்குமாறு அரசை வற்பு றுத்துவது.

- இந்தத் தீர்மானங்கள் உட்பட பல்வேறு தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. (உ)

### ஆயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூர்த்தியானதை அடுத்து புதிய ஆய ரைத் தெரிவு செய்வதற்கான கூட் டம் நேற்று மாலை நடைபெற்றது.

இரண்டு சுற்று வாக்களிப்பு இடம்பெற்றது. இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்ற தமிழரான வண.பிதா ஒருவர், சிங்களவரான வண.பிதா ஒருவர் ஆகிய இருவரிலும் எவரும் மூன்றில் இரண்டு பங்கு வாக்குக ளைப் பெறாத நிலையில் புதிய ஆயரைத் தெரிவு செய்யும் பொறுப்பு அதிமேற்றிராணியாரிடம் ஒப்படைக் கப்பட்டது.

(உ)

### பொதுச் செயலராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காக நடத்தப்பட்ட தேர்தலின் முடிவு கள், சங்கத்தின் 27ஆவது வரு டாந்தப் பொதுக்கூட்டத்தின் கடைசி நாளான நேற்று, மாநாடு நடைபெற்ற திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் வைத்து அறிவிக்கப் பட்டன.

பொதுச் செயலாளர் பதவிக்குப் போட்டியிட்ட த.மகாசிவம் 401 வாக் குகளையும் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சி.குமரகுருதாஸன் 22 வாக்குகளையும் பெற்றனர்.

துணைத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டவர்களில் அதிக வாக்கு களைப் பெற்ற யாழ்.இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எஸ். ஜெய ராஜா சிரேஷ்ட துணைத் தலைவ ராகத் தெரிவு செய்யப்பட்டார். அவ ருக்கு 272வாக்குகள் கிடைத்தன.

திருமதி ப.யோகரட்ணம் (திரு மலை - 215 வாக்குகள்), ச.ஜெய சீலன்(பொகவந்தலாவை - 166 வாக் குகள்), க.தியாகராஜா (துணுக்காய் - 148 வாக்குகள்) ஆகியோரும் துணைத் தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

337 வாக்குகளைப் பெற்ற த.பஞ்சலிங்கம் (யாழ்ப்பாணம்) சிரேஷ்ட துணைப்பொதுச் செயலா ளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

167 வாக்குகளைப் பெற்ற திரு மதி விமலா ஸ்ரீதரன்(திருமலை), 140 வாக்குகளைப் பெற்ற ஆ.அருமைநா யகம் (வவுனியா) ஆகியோரும் துணைச் செயலாளர்களாகத் தேர்ந் தெடுக்கப்பட்டனர்.

ந.தருமராஜா நிதிச் செயலாளரா கவும், ஆ.ஜெயக்குமார் (வட்டுக் கோட்டை - 285 வாக்குகள்) சிரேஷ்ட துணை நிதிச் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம், வன்னி, திருகோ ணமலை என்று மூன்று இடங்களில் வெவ்வேறு தினங்களில் இடம்பெற்ற வாக்களிப்பில் சங்கத்தின் கிளைக் குழுக்களின் பிரதிநிதிகள் வாக் களித்திருந்தனர்.

(உ)


IBMS இன் புலமைப்பரிசில் திட்டம் 2001

மேற்படி புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் April மாதத்தில் ஆரம்பமாகவுள்ள புதியபிரிவுகளிற்கு பதிவு செய்த மாணவர்களிற்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளன.

இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் April 10ம் திகதிக்கு முன்னர் தங்களது பதிவுகளை தலைமைக் காரியாலயத்தில் அல்லது கிளைகளில் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

மாணவர்களே!

தகவல்தொழில்நுட்ப உலகுடன் இணையத்தவறிவிட்டீர்களா? கவலையைவிடுங்கள்

உங்களிற்காகவே !



விசேடகழிவுக்கட்டணத்தின் கீழ் கற்கைநெறிகளை IBMS வழங்கவுள்ளது

Institute of Business Management Studies IBMS

மேலதிக தகவல்களிற்கு எமது காரியாலயங்களில் தொடர்புகொள்ளவும்.

Head Office: IBMS No. 701,K.K.S Road, Jaffna.

Branches: Near M.P.C.S, Chankanai. N.M.M.V Road, Nelliyadi.

Tele : 021- 3165

Email:ibmsjaffna@yahoo.com ibmsjaffna@ultavista.com

மாணவ மணிகளே!

இம்முறைஏமாந்து விட்டீர்களா! இனியும் ஏமாறாதீர்கள்! உங்கள் கல்வியின் கனவை நனவாக்கும் ஒரே நிறுவனம் SUBRA

O/L Day Class

ஆரம்பம்:-5/04/2001 காலை7.00

(C/15917)

கணக்கீடு

A/L 2003 புதிய பிரிவு

ஆரம்பம்: இன்று (01.04.2001) ஞாயிறு பிற்பகல் 2 மணி

வழமையான நேரம் sat.,sun. 2 p.m

ஆசிரியர்: S. தவா B.com.(Hons) [Acc.Spl.]

தூர இடத்து மாணவர்களின் கஷ்டநிலை அறிந்து அவர்களது வசதிக்காக இந்த நேரம் வழங் கப்படுகின்றது.

NEW SCIENCE COLLEGE JAFFNA (88084)

BITSMANS

கல்வி நிறுவனம் - மானிப்பாய்

பிரிவு 2 O/L DAY CLASS

எமது வழமையான ஆசிரியர் குழு.

ஆரம்பம்:நாளை (2-4-2001) திங்கள் 8 மணி a.m.

A/L 2003 கலை,வர்த்தக, கணித, உயிரியல் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

(86077)

BRIGHTMAN கல்வி நிலையம்

பிறவுண் வீதி, யாழ்நகர்.

O/L DAY CLASS (8.00-2.00) (MON. - FRI.)

யாழ்.முன்னணி ஆசிரியர் குழு மூலம் கற்பிக்கப்படுகின்றன.

பிரிவு -1 (அனுமதிகள் வழங்கப்படுகின்றன)

பிரிவு -2 (மிக விரைவில்)

(86088)

O/L DAY CLASS

வினைவீஸ் சுன்னாகம்

கணிதம் அயித்குமார்

ஆரம்பம்:- 03.04.2001 செவ்வாய்க்கிழமை.

(85982)

O/L DAY CLASS

ஏப்ரல் 02இல் ஆரம்பம்

பெயர் பதிவுகள் ஏற்கப்படுகின்றன.

(C/15939)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.04.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.